# சிலம்பு பிறந்த கதை

கி.வா.ஜகந்நாதன்

அமுத நிலையம்

# சிலம்பு பிறந்த கதை

★

கி. வா. ஜகந்நாதன்

★

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனும்பேட்டை : : சென்னை-18

உரிமை பதிவு
அமுதம்—203

Printed on
Double Crown White Printing Paper-24 Lbs.

விலை ரூ. 0—75

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை-18.

# முன்னுரை

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரம் கண்ணகியின் கதையைச் சொல்வது. அதனை இயற்றியவர் இளங்கோவடிகள். காப்பியத்தின் மூன்றாம் பகுதியாகிய வஞ்சிக் காண்டக் கதையில் அவரே வருகிறார். அவர் சிலப்பதிகாரம் இயற்றப் புகுந்த கதையே இனிமையானது.

செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டி அந்தப் பத்தினியின் திருவுருவைப் பிரதிட்டை செய்தான். அதனை அடுத்து இளங்கோவடிகள் இந்தக் காவியத்தை இயற்றினார். செங்குட்டுவன் அமைத்த கற்கோயில் இப்போது இருக்கிற இடம் தெரியவில்லை. ஆனால் இளங்கோவடிகள் இயற்றிய சொற் கோயிலாகிய சிலப்பதிகாரக் காப்பியம் இன்றும் மெருகழியாமல், அழகு குலையாமல் தமிழர்களுக்கு இலக்கிய விருந்தாய் நிலவு கிறது. இதனைத் தமிழுலகுக்கு முதல் முதலில் முழுமையாகக் கண்டுபிடித்து அச்சிட்டு உதவியவர்கள் மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள்.

செங்குட்டுவன் கற்கோயில் அமைத்த கதையும் இளங்கோ வடிகள் சொற்கோயில் அமைத்த கதையும் தொடர்புடையவை. அந்த இரண்டையும் இணைத்து இந்தச் சிலம்பு பிறந்த கதையை எழுதினேன். சிலப்பதிகாரத்தில் பதிகத்திலும் கட்டுரை காதையி லும் உள்ள செய்திகளும், வஞ்சிக்காண்டம் முழுவதிலும் காணப் படும் வரலாறும், அடியார்க்கு நல்லார் உரையில் உள்ள சில குறிப்புகளும் இதை எழுத ஆதாரமாக இருந்தன.

*"காந்தமலை"*
*சென்னை-28*
*27—10—61*

**கி. வா. ஜகந்நாதன்**

# பொருள் அடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | இளங்கோவின் பயணம் | ... | 1 |
| 2. | துறவரசர் | ... | 10 |
| 3. | இருபெரும் புலவர்கள் | ... | 18 |
| 4. | மலை வளம் | ... | 23 |
| 5. | சேரமான் தீர்மானம் | ... | 32 |
| 6. | மூன்று உண்மைகள் | ... | 39 |
| 7. | சேரமன்னன் புறப்பாடு | ... | 49 |
| 8. | இமயத்துச் சிலை | ... | 55 |
| 9. | கங்கைக் கரையில் | ... | 62 |
| 10. | பெரு வேள்வி | ... | 70 |
| 11. | பத்தினி கோயில் | ... | 78 |
| 12. | சிலம்பின் உதயம் | ... | 83 |

# சிலம்பு பிறந்த கதை

## 1. இளங்கோவின் பயணம்

பழைய காலத்தில் தமிழ்நாடு மூன்று பிரிவாகப் பிரிந்திருந்தது. அவற்றைச் சோழ நாடு, பாண்டி நாடு, சேர நாடு என்று சொன்னார்கள். சோழ நாட்டின் தலைநகராகிய உறையூரில் இருந்து சோழ மன்னர்கள் ஆட்சி புரிந்தார்கள். பாண்டிநாட்டின் தலைநகராகிய மதுரையில் பாண்டிய மன்னர்கள் செங்கோல் செலுத்திவந்தார்கள். சேரநாட்டுக்குத் தலைநகர் வஞ்சிமாநகர். அதைத் தம்முடைய இடமாகக்கொண்டு சேரமன்னர்கள் அரசாட்சி புரிந்தார்கள். இந்த மூன்று மன்னர்களின் பரம்பரையும் மிக மிகப் பழைய காலம் முதற்கொண்டே இந்த நாட்டில் இருந்துவருகின்றன.

சோழ நாட்டுக்குச் சிறப்புத் தருவது காவிரி ஆறு. பாண்டிநாட்டுக்குப் பெருமை தருபவை வையை, தாமிரபர்ணி என்னும் ஆறுகள். சேர நாட்டில் ஓடுவது பேராறு. ஒவ்வொரு நாட்டிலும் கடற்கரையைச் சேர்ந்த இடங்கள் இருந்தன. அதனுல்

மன்னர்கள் கடற்கரையிலும் சில நகரங்களை அமைத்துக் கொண்டார்கள். சோழநாட்டில் காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் இருப்பது காவிரிப்பூம் பட்டினம். அதைப் புகார் என்றும் சொல்வார்கள். அது பெரிய கடற்கரை நகரமாக விளங்கியது. பாண்டிநாட்டில் கொற்கை பெரிய கடற்கரைப் பட்டினம். சேரநாட்டின் தலைநகராகிய வஞ்சியே கடற்கரைப் பட்டினந்தான்; முசிறி என்ற பட்டினம் வேறு இருந்தது.

இந்த மூன்று நாடுகளில் சேரநாடு மேற்குக் கடற்கரை ஓரமாக இருப்பது; இன்று கேரளம் என்று வழங்கும் இடம் முழுவதும் முன்பு சேரநாடாக இருந்தது. சேரநாட்டில் மலைகள் மிகுதி. அதனால் அதை மலைநாடு என்றும் சொல்வது உண்டு. அக் காலத்தில் சேரநாட்டிலும் தமிழே வழங்கி வந்தது.

ஒவ்வோர் அரசருக்கும் தனித்தனியே மாலை, கொடி முதலிய அடையாளங்கள் உண்டு. சேரனுடைய அடையாள மாலை பனைமாலை. அவனுடைய கொடி விற்கொடி; அதாவது அவனுடைய கொடியில் வில்லின் உருவம் எழுதி யிருக்கும்.

சேரமன்னர்களில் சிலர் இமயம்வரை சென்று தம் புகழை நிலைநாட்டினார்கள். தென்குமரி முதல் வடஇமயம் வரையில் தன் வீரத்தை நாட்டியவர்களில் ஒருவன் நெடுஞ்சேரலாதன் என்பவன். அவன் வீரத்தாலும் கொடையாலும் புகழ் பெற்றவன். அற நெறி திறம்பாதவன். தன் குடிகளைத் தாய்போலப் பாதுகாப்பவன். புலவர் பெருமக்களைப் பாராட்டிப்

பலவகைப் பரிசில்களை வழங்குபவன். அவர்கள் அவனை அருமையான பாடல்களால் பாடிப் புகழ்ந் தார்கள்.

இந்த நெடுஞ்சேரலாதனுக்கு இரண்டு ஆண் மக்கள் இருந்தார்கள். மூத்தவன் செங்குட்டுவன். அவனுடைய தம்பியின் பெயர் இன்னதென்று தெரிய வில்லை. எல்லோரும் அவரை இளங்கோ என்று அழைத்தார்கள். இளங்கோ என்பதற்கு இளவரசன் என்பது பொருள்.

நெடுஞ்சேரலாதன் தன் புதல்வர் இருவருக்கும் தக்கபடி ஆசிரியர்களை அமைத்துக் கல்வி கற்பிக்கச் செய்தான். இருவரும் மனம் ஒன்றிப் பயின்று வந்தனர். உடல் வளர வளர அவர்களுடைய அறிவும் வளர்ந்து வந்தது.

சேரமன்னனாகிய நெடுஞ்சேரலாதனுக்கு முதுமைப் பருவம் வந்தது. ஆதலின் தன்னுடைய மூத்த புதல்வனாகிய செங்குட்டுவனை எப்போதும் தன் அருகிலேயே வைத்துக்கொண்டு அரசியல் முறைகளை யெல்லாம் பழக்கி வைத்தான். அமைச்சர்களும் படைத்தலைவர்களும் தம் அநுபவத்தாலும் நூல்களாலும் அறிந்த பல கருத்துக்களை அவனுக்குக் கூறினார்கள்.

தனக்குப் பிறகு அரசாட்சி செய்வதற்குரிய செங்குட்டுவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டவேண்டுமென்ற விருப்பம் அரசனுக்கு உண்டாயிற்று. அதை அவன் தன் அவைக்களத்தில் இருந்த பெரியவர்களிடம் சொன்னான். அவர்கள் அப்படியே செய்யலாம்

என்ருர்கள். அமைச்சர்களும் அதைக் கேட்டு, நல்லது தான் என்று சொன்ஞர்கள். குடிமக்களும் அந்தச் செய்தியைக் கேட்டுக் களிப்படைந்தார்கள்.

ஒரு நல்ல நாளில் பலரும் சூழ மிகச் சிறப்பாகச் செங்குட்டுவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினுன், நெடுஞ்சேரலாதன். அதே சமயத்தில் அவனுடைய தம்பியாகிய இளங்கோவுக்குப் பெருநம்பி என்ற பட்டம் கொடுத்து, அதற்கு ஏற்ற அடையாளங்களாகிய பொற்பூ முதலியவற்றை வழங்கினுன். அரசியலில் மிகச் சிறந்த அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் நம்பி என்றும் பெருநம்பி என்றும் சிறப்புப் பெயர்களை வழங்குவது அக்கால அரசர்களின் வழக்கம். இளங்கோ அன்று முதல் பெருநம்பி இளங்கோ என்று, பட்டப் பெயருடன் யாவரும் அழைக்கும் நிலையைப் பெற்ருர்.

இளங்கோவுக்குத் தமிழ் நாடு முழுவதும் சென்று அங்கங்கே உள்ள காட்சிகளைக் கண்டு களித்து வர வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. பெரிய நகரங்களையும் சிற்றூர்களையும் கண்டு மகிழ வேண்டும் என்று விரும்பினர். பாண்டிய மன்னனையும் சோழ மன்னனையும் கண்டு அவர்கள் நாட்டிலுள்ள ஆறு களையும் மலைகளையும் வழிபாட்டிடங்களையும் காணும் விருப்பமும் அவருக்கு எழுந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக அவருக்கு உண்டான பெரிய விருப்பம் ஒன்று உண்டு. மதுரைமா நகரத்தில் பாண்டிய மன்னன் தமிழ்ச் சங்கம் வைத்து நடத்தி வந்தான். அதில் பல பெரும் புலவர்கள் இருந்து நல்ல நூல்களை இயற்றி வந்தார்கள். கல்வியிற் சிறந்து நின்ற இளங்கோவுக்கு

அந்தப் புலவர்களோடு பழகி இன்புற வேண்டுமென்று மிக்க ஆர்வம் உண்டாயிற்று.

தந்தையிடம் விடை பெற்றுத் துணைக்குச் சிலரை அழைத்துக் கொண்டு பயணம் புறப்பட்டார் இளங்கோ. ஆரவாரமாகப் பல பேரைக் கூட்டிக் கொண்டு போக அவர் விரும்பவில்லை. தனியே தம் மனம்போனபடி போய், ஏழை பணக்காரர் என்று பாராமல் எல்லாரோடும் பழகவேண்டும் என்பது அவருடைய நோக்கம். தம்முடன் யாராவது வந்தால், "இவர் சேர அரசர் பிள்ளை ; பெருநம்பி இளங்கோ" என்று போன இடங்களிலெல்லாம் சொல்வார்கள். அதைக் கேட்பவர்கள் மிகவும் மரியாதை செய்யத் தொடங்குவார்கள் ; விலகி நிற்பார்கள். அவர்களோடு மனம் கலந்து பழகினால் தெரியவரும் பல செய்திகளை, அப்போது தெரிந்துகொள்ள முடியாது.

தனியே போய் வருகிறேன் என்று தன் இளம் புதல்வன் சொன்னதை நெடுஞ்சேரலாதன் ஏற்றுக் கொள்ளவில்லை. "இரண்டு மூன்று பேராவது உன்னுடன் துணைக்கும் ஏவல் செய்வதற்கும் இருக்க வேண்டும். தனியே போய்விட்டு, போன இடத்தில் விழிக்கக் கூடாது" என்று சொன்னான். வேறு வழியின்றிச் சில பேரை அழைத்துக்கொண்டு புறப்பட்டார் இளங்கோ.

முதலில் சோழ நாடு முழுவதையும் பார்த்தார். அங்கே உள்ள நிலவளத்தையும் நீர்வளத்தையும் கண்டு வியந்தார். காவிரி, மணமான மங்கை மெல்ல நடந்து போவதுபோல, வெள்ளம் நிரம்பிப் போவ

தைப் பார்த்து உள்ளத்தைப் பறிகொடுத்தார். காவிரிப்பூம்பட்டினம் போனார். அந்த நகரத்தின் அமைப்பையும் அரண்மனையையும் மாளிகைகளையும் கண்டு கண்டு மகிழ்ந்தார். ஒவ்வொன்றையும் ஊன்றிக் கவனித்தார். அரசர்கள் வெளிநாடுகளில் உள்ள பிற மன்னர்களோடு போர் செய்து வென்றதற்கு அறிகுறியாகப் பல வெற்றிச் சின்னங்களை எழுப்பியிருப்பார்கள். கரிகால் சோழன் அவ்வாறு பெற்ற வெற்றிகளுக்கு அடையாளமாகப் பல அமைப்புக்கள் அங்கே இருந்தன. அவற்றையெல்லாம் கண்டார். அவை அங்கே இருப்பதற்குக் காரணம் இன்னது என்று விசாரித்து அறிந்தார். இவ்வாறு கண்டும் கேட்டும் பல புதிய வரலாறுகளையும் உண்மைகளையும் அவர் தெரிந்துகொண்டார். பல இடங்களுக்குப் பயணம் செய்வதனால் கிடைக்கும் பெரும் பயனை அவர் நன்கு அறிந்துகொண்டார்.

காவிரிப்பூம்பட்டினத்தைப் பார்த்துவிட்டு, கழுமலம் (சீகாழி), உறையூர் முதலிய வேறு பல ஊர்களைப் பார்த்தார். திருவரங்கத்துக்குச் சென்று அங்குள்ள திருமாலைத் தரிசித்துக் கொண்டார்.

பிறகு பாண்டி நாட்டுக்கு வந்தார். வரும் வழியில் பல காடுகள் இருந்தன. அந்தக் காடுகளில் வேடர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் கொற்றவை என்னும் துர்க்கைக்குப் பூசை போட்டு ஆடிப் பாடி வழிபட்டார்கள். அந்தக் காட்சிகளைக் கண்ட இளங்கோவுக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. அப்படியே பாண்டி நாடு புகுந்து மதுரையை அடைந்தார். பாண்டியனைக் கண்டு அளவளாவினார். தமிழ்ச்

சங்கம் சென்று, அதிலிருந்து தமிழ் ஆராய்ச்சி செய்து வந்த புலவர்களை யெல்லாம் கண்டு பேசினர். பல நாட்கள் மதுரையிலே தங்கிவிட்டார்.

அங்கே அவர் தங்கியதற்குத் தமிழ்ப் புலவர்களோடு பல நாள் பழகி இன்புற வேண்டும் என்ற விருப்பமே காரணம். ஒரு நாள் திருமாலிருஞ் சோலைமலை போய்ப் பார்த்து வந்தார். சிலம்பாற்றையும் புண்ணிய சரவணமென்னும் பொய்கையையும் கண்டு வந்தார். தமிழ்ப் புலவர்களோடு பழகப் பழக, அவர்களோடே இருந்துவிடலாம் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆனல் அது நடக்கிற காரியமா? தன் புதல்வரை அயல் நாட்டில் வாழும்படி செய்ய அவருடைய தந்தைக்கு மனம் வருமா?

சேர மன்னனின் இளங்குமரருடைய அறிவாற்றலையும் பண்பையும் கண்டு புலவர்கள் வியந்தனர். மன்னர் குலத்தில் பிறந்தோம் என்ற மிடுக்கே இல்லாமல் மிக்க பணிவாக நடந்து கொண்டார் இளங்கோ. தாம் மிகுதியாகப் பேசாமல் புலவர்கள் பேசுவதைக் கேட்பதில் ஆர்வம் காட்டினர். அப்படிப் பேசினலும் சில சொற்களே சொன்னர். சில சொற்களேயானலும் அவையே அவருடைய பண்பை எடுத்துக் காட்டின. பிற்காலத்தில் அவர் பலரும் போற்றும் பெரிய நிலையை அடைவார் என்று புலவர்கள் பாராட்டினர்கள்.

புலவர்களிடம் பழகிய முறையினல் அவர்களுடைய பேரன்பைப் பெற்ருர் இளங்கோ. எல்லாப் புலவர்களிடமும் பழகிப் பயன் பெற்ருலும் சிலரிடம்

நெருங்கிப் பழகினர். அவர்களுக்குள் சாத்தனர் என்பவருக்கும் இளங்கோவுக்கும் மிக நெருங்கிய நட்பு உண்டாயிற்று.

சாத்தனர் மதுரையில் தானியக்கடை வைத்திருந்தார். புலவர்களிற் பலர் தமக்குரிய தொழில்களைச் செய்துகொண்டே கவிகளைப் பாடி வந்தார்கள்; நூல்களை இயற்றி வந்தார்கள்; தமிழ்ச் சங்கத்தில் ஆராய்ச்சி செய்தார்கள். தானியக் கடை வைத்திருந்த சாத்தனரைக் கூல வாணிகன் சாத்தனர் என்று அழைத்தார்கள். தானியத்துக்குக் கூலம் என்பது ஒரு பெயர். கூல வாணிகன் என்பதற்குத் தானிய வியாபாரி என்று பொருள். 'வாணிகத்தையும் நன்றாக நடத்திக்கொண்டு தமிழிலும் பெரிய புலவராக இருக்கிறரே!' என்று சாத்தனரிடத்தில் வியப்பும் மதிப்பும் சேர அரசனின் புதல்வருக்கு உண்டாயிற்று. சாத்தனருக்கோ, 'பழைய அரச குலங்களில் ஒன்றாகிய சேர குலத்தில் தோன்றியவர் இவ்வளவு பணிவாகவும் அறிவாளியாகவும் இருக்கிறரே!' என்று வியப்பு எழுந்தது.

சாத்தனரும் இளங்கோவும் நண்பர்களாயினர். "தாங்கள் வஞ்சிமா நகருக்கு வரவேண்டும். என் தந்தையார் தங்களைப் போன்ற புலவர்களைக் கண்டால் எல்லையற்ற மகிழ்ச்சி அடைவார். என் தமையனர் என்னை விடப் பன்மடங்கு அறிவாளி. அவரும் தங்களைக் காண்பதால் உவகையும் பயனும் பெறுவார்" என்று இளங்கோ இயம்ப, "அப்படியே வருகிறேன்" என்று ஒப்புக்கொண்டார் சாத்தனர். அவர் இளங்கோவைப் பாண்டி நாட்டிற் பல இடங்களுக்கு அழைத்

துச் சென்று காட்டினர். மதுரைக் கோயிலையும் வையையையும் கண்டு இன்புற்றார் இளங்கோ.

பின்பு தென்பாண்டி நாடு சென்று பொருநையாறாகிய தாமிரபர்ணியைக் கண்டு களித்தார். பொதிய மலைக்குச் சென்று அதன் எழிலைப் பருகினர். பொதியத் தென்றலின் இன்பத்தை நுகர்ந்தார். திருக்குற்றால அருவியில் ஆடி இன்புற்றார்.

அவர் நகரை விட்டு வந்து பல நாட்களாகி விட்டன. தமிழ்நாட்டின் வடக்கே உள்ள தொண்டை நாட்டுக்குப் போகவேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தோன்றியது. ஆகவே பாண்டி நாட்டைக் கண்டு களித்ததோடு நின்று நேரே வஞ்சிமா நகரை அடைந்தார்.

இடையிடையே தம்முடைய சேரநாட்டின் மலை வளங் கண்டு இன்புற்றார். பேராற்றங்கரை வழியே சென்று பார்த்தார். கடலையும் கழிகளையும், மலையையும் முகடுகளையும், காட்டையும் விலங்குகளையும் கண்டுகண்டு அவற்றின் அழகைக் கண்ணால் பருகினர். செங்கோடு என்ற மலைமேல் ஏறி அங்குள்ள முருகனைத் தரிசித்தார். தாம் அதுகாறும் மலைநாட்டில் போகாத இடங்களுக்கெல்லாம் போய்வந்தார்.

இளவரசுப் பட்டம் பெற்ற தம் தமையனருக்கு இத்தகைய பயணம் செய்யும் வாய்ப்பும் ஓய்வும் கிடைப்பது அருமை என்பதை எண்ணியபோது, ‘நல்ல வேளை! நாம் தலைமகனகப் பிறக்காமற் போனேம்!’ என்ற நினைவும் உடன் தோன்றியது. எத்தனை இடங்கள், எத்தனை காட்சிகள்! அவற்றைப் பார்த்ததனால் எத்தனை புதிய உண்மைகளை உணர முடிந்தது!

# உ. துறவரசர்

பெரும் பயணமும் சிறு பயணமும் நிறைவேறிய பிறகு இளங்கோ வஞ்சிமா நகரை அடைந்தார். தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் தம் தந்தைக்கும் தமையனுக்கும் விரித்துரைத்தார். தமிழ்ப் புலவராகிய சாத்தனரை ஒரு முறை வருவித்துச் சிறப்புச் செய்ய வேண்டும் என்ற தம் விருப்பத்தையும் தெரிவித்தார்.

அவர் விருப்பப்படியே சாத்தனரை அரசன் அழைத்துவரச் செய்தான். அவருடைய புலமையை உணர்ந்து பாராட்டிப் பரிசு அளித்தான். சாத்தனரோடு செங்குட்டுவன் நன்ருகப் பழகினன். "அடிக்கடி இங்கே வரவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். இளங்கோ, "இனி என் பொருட்டாக வர மறந்தாலும் என் தமையனருக்காகவாவது வரவேண்டும்" என்று சொல்லிப் புன்முறுவல் பூத்தார். "இரண்டு பேருக்காகவும் வருவேன்; உண்மையைச் சொல்லப் போனல் எனக்காகவே வருவேன். வருவதனல் எனக்குத் தானே இலாபம்?" என்ருர் சாத்தனர்.

ஒரு நாள் நெடுஞ்சேரலாதன் திரு ஓலக்கத்தில் இருந்தான்; சிங்காதனத்தில் அமர்ந்திருந்தான். அமைச்சர், படைத் தலைவர், நியாய சபைத் தலைவர், நகரத்திற் பெரியவர்கள், புலவர்கள் முதலிய பலர் அங்கே இருந்தார்கள். அரசனுடைய வலப் பக்கம் ஒரு சிறிய பொன் ஆதனத்தில் இளவரசன் செங்குட்டுவன் வீற்றிருந்தான். இடப் பக்கம் வேறு தனி யாசனத்தில் பெருநம்பி இளங்கோ அமர்ந்திருந்தார்.

இரு பக்கமும் மன்னனுக்கு இரண்டு மங்கையர் கவரி வீசிக் கொண்டிருந்தனர்.

அப்போது வீரயில் காவலன் வந்து நெடுஞ் சேரலாதனை வணங்கி, "மன்னர்பிரான் வாழ்க!" என்று சொல்லி நின்ருன்.

"என்ன செய்தி ?" என்று கேட்டான் அரசன்.

"யாரோ சோதிடராம். பல மன்னர்களைக் கண்டு சோதிடம் கூறிப் பரிசு பெற்றவராம். மன்னர் பெருமானைக் காண வேண்டுமென்று சொல்லுகிருர்" என்று பணிவுடன் வாயிலோன் சொன்ஞன்.

"அப்படியா? அவரை உள்ளே அனுப்பு" என்று அரசன் பணித்தான்.

"மன்னர்பிரான் வெல்க!" என்று சொல்லிச் சென்ற வாயிலோன், சிறிது நேரத்தில் அந்தச் சோதிடரைக் கொண்டுவந்து விட்டுத் தன் இடம் சென்ருன்.

வந்த சோதிடர் மன்னனை வணங்கித் தாம் கொணர்ந்த பழத்தைக் கையுறையாகக் கொடுத்தார்; பணிவாக நின்றுகொண்டிருந்தார்.

"நீர் சோதிடரா?" என்று கேட்டான் மன்னன்.

"ஆம்" என்ருர் அவர்.

"உமக்கு எந்த நாடு?"

"சோழநாடு."

"அப்படியே அந்த ஆசனத்தில் அமரும்" என்று சொல்லி ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டிஞன் சேர மன்னன். சோதிடர் அதில் உட்கார்ந்து கொண்டார்.

"நீர் எப்படிச் சோதிடம் பார்ப்பீர்? பிறந்த நாள், பொழுது முதலியவற்றைச் சொன்னால் சாதகம் கணித்துப் பார்த்துப் பலன் சொல்வீரா? கை இரேகைகளைப் பார்த்துச் சொல்வீரா?" என்று மன்னன் கேட்டான்.

"அவற்றையும் பார்ப்பேன். அவற்றைப் பாராமலே உடற்கூற்றைப் பார்த்தே பலன் சொல்வேன்" என்றார் சோதிடர்.

"என்ன என்ன பொருளைச் சொல்வீர்?" என்று கேட்டான் அரசன்.

சோதிடர்: எதைக் கேட்டாலும் சொல்வேன். பிள்ளைகள் இத்தனை என்று சொல்வேன்; மனைவிமார் இத்தனை பேர் என்று சொல்வேன். போனதையும் சொல்வேன்; வருவதையும் சொல்வேன்.

அரசன்: ஒருவருக்கு இத்தனை ஆயுள் என்று வரையறையாகச் சொல்வது அரிது என்கிறார்களே! நீர் திட்டமாகச் சொல்வீரா?

சோதிடர்: ஓ! உறுதியாகச் சொல்வேன்.

அரசன்: அப்படியானால் என்னைப் பார்த்து ஏதாவது சொல்லும்; பார்க்கலாம்.

சோதிடர் அரசனை அடிமுதல் முடிவரையில் நோக்கினார். அங்கே இருந்த அத்தனை பேரும் அவர் என்ன சொல்லப்போகிறாரோ என்ற ஆவலுடன் அவர் வாயையே பார்த்துக்கொண்டிருந்தனர். அரசனை நன்றாகப் பார்த்த சோதிடர், "மன்னர் பெருமானுக்கு எதைப்பற்றிச் சொல்ல வேண்டும்?" என்றார்.

அரசன் : இன்னும் எத்தனை காலம் நான் இவ்வுல கில் வாழ்வேன்?

இந்தக் கேள்வியைக் கேட்டதும் அருகில் இருந்த அமைச்சர் முதலியவர்களுக் கெல்லாம் வயிறு பகீரென்றது. சோதிடர் சிறிது தயங்கினார்.

அரசன் : சிறிதும் கவலைப்படாமல் சொல்லும். என் றைக்காவது ஒரு நாள் நான் உலகத்திலிருந்து விடைபெற வேண்டியவன்தானே? ஆகையால், இன்னும் எவ்வளவு ஆண்டுகள் இருப்பேன் என்பதைச் சொன்னால் தெரிந்து கொள்கிறேன். நீர் ஒளிக்காமல் உண்மையைச் சொல்ல வேண்டும். என் சாவு அணிமையில் இருக்குமானால் அதைச் சிறிதும் அஞ்சாமல் சொல்லும். உண்மை எதுவானா லும் கேட்கச் சித்தனாக இருக்கிறேன்.

சோதிடர் : மன்னர்பிரான் திருவுள்ளப்படியே சொல் வதில் தடை இல்லை. ஆனால் அதைத் தெரிந்து கொண்டு மன்னர் பெருமான் செய்யப் போவது ஒன்றும் இல்லையே!

அரசன் : எத்தனையோ இருக்கின்றன. போகும் இடத்துக்கு ஏற்ற துணையைத் தேடிக்கொள்ள வேண்டாமா?

சோதிடர் மறுபடியும் அரசனுடைய உடம்பு முழு வதையும் உற்றுநோக்கி, "நான் நல்ல செய்தி யைச் சொல்லவேண்டும் என்றுதான் ஆசைப் படுகிறேன். ஆனால் உண்மையைத் தானே சொல்லவேண்டும்?" என்றார்.

அரசன் : சுற்றி வளைத்துப் பேசாதீர். நேரே உண்மையை ஒளியாமல் சொல்லிவிடும்.

சோதிடன் : இன்னும் சில மாதங்களில் மன்னர் பெருமானுக்குப் பொன்னுலகு சென்று தேவர் போற்ற வாழும் வாழ்வு கிடைக்கும் என்று தோன்றுகிறது.

அருகில் இருந்தவர்கள் தம்மை அறியாமலே 'ஆ!' என்று கூவினுர்கள். சோதிடர், 'ஏனடா இதைச் சொன்னேம்!' என்று வருந்திஞர்.

அரசனே, "நல்லது; இறைவன் திருவுள்ளம் அதுவானுல் அதை ஏற்றுக்கொள்வதுதானே அறிவாளிகளுக்கு அழகு?" என்ருன். தொடர்ந்து, "என் நிலையை உணர்ந்தேன். என் மக்கள் நிலையையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதோ இருக்கும் இரண்டு பேர்களும் என் புதல்வர்கள். இவர்களைப்பற்றி ஏதாவது சொல்லும்" என்று கேட்டுக்கொண்டான்.

சோதிடருடைய கண்பார்வை இளங்கோவின்மேே விழுந்தது. அரசனுக்கு வலப்பக்கத்தில் இருந்தவர்களோடு சோதிடர் அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரில் இடப்பக்கத்தில் முன்னுலே இளங்கோ வீற்றிருந்தார். ஆதலின் அவரையே முதலில் பார்த்தார்; மேலும் கீழும் பார்த்தார். பிறகு, "இவருடைய அங்க அடையாளங்களைக் கண்டால் இவரே மன்னர்பிரானுக்குப் பிறகு இந்தச் சிங்காதனம் ஏறும் பேறு பெற்றவர் என்று தெரிகிறது" என்ருர்.

இதைக் கேட்ட யாவரும் இரண்டாம் முறை திடுக்கிட்டனர். 'சோதிடர் யார் மூத்த புதல்வர் என்று தெரியாமல் சொல்லிவிட்டாரோ? அல்லது இரண்டாம் புதல்வர் என்று தெரிந்தும் நடக்கப்போவதை ஒளிக்காமல் சொன்னாரோ?'—அவர்களுக்கு இவ்வாறு சிந்தனை ஓடிற்று.

"இவனையா சொல்கிறீர்?" என்று அரசன் இளங்கோவைக் கையால் சுட்டிக் காட்டியபடியே கேட்டான்.

"ஆம்; இந்த இளைஞரைத்தான் சொல்கிறேன். வருங்கால மன்னர் இவர்" என்று வற்புறுத்திச் சொன்னார் சோதிடர்.

மற்றவர்கள் யாவரும் கலக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். அரசனும் சற்றே திகைப்படைந்தான். செங்குட்டுவன் எப்படி இருந்தான்? அவன் கண்கள் சிவந்தன; உடம்பு பதறியது. இப்போதே தன்னோடு தன் தம்பி போரிட்டுத் தோல்வி யடையச் செய்து, சிங்காதனம் ஏறியதாக எண்ணிவிட்டானோ என்னவோ? அவன் தன் தந்தையை நோக்கினான். அவனுடைய பார்வை, 'என்ன இது? நீங்கள் யாருக்கு அரசுரிமை வழங்கப்போகிறீர்கள்' என்று கேட்பதுபோல இருந்தது.

சில கணங்கள் யாவரும் ஒன்றும் பேசத் தெரியாமல் மூச்சும் விடாமல் குழப்பத்தில் ஆழ்ந்தனர்.

அப்பொழுது கணீர் என்று ஒரு குரல் எழுந்தது. இளங்கோவே எழுந்து நின்று, "மன்னர் பெருமானே!" என்று அழைத்த குரல் அது. அரசன்

அவரை நோக்கினுன். செங்குட்டுவன் பார்வையும் அவர்மேல் பதிந்தது. மற்றவர்களும் அவரையே பார்த்தார்கள்.

"இதோ, இந்தச் சோதிடர் சொற்களைப் பொய் யாக்கி விடுகிறேன் நான். எனக்கா இந்த அரசாட்சி கிடைக்கும் என்று சொன்னுர்? நான் இதோ இந்தக் கணத்திலே துறவுபூண்பதாகச் சபதம் செய்கிறேன். என் தமையனுர் நெஞ்சில் ஐயம் இருந்தால் இப் போதே ஒழியட்டும். நான் இன்றுமுதல் துறவி. எனக்கும் இந்த அரசுரிமைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை."

"என்ன இது! என்ன இது!" என்று யாவரும் திணறிக்கொண்டு கேட்டார்கள். சோதிடர்கூட ஒன் றும் தெரியாமல் விழித்தார்.

இளங்கோ மேலும் பேசலானுர்; "இந்தச் சேர நாட்டரசு எனக்குப் பெரிதன்று. முடிவே இல்லாத பேரின்ப அரசு எனக்குக் கிடைக்கும்படி நான் விரதம் இருந்து நோற்பேன். முடிஏற்ற பிற அரசர்போல வாழா மல் முடி எடுத்த துறவரசனுக வாழ்வேன்" என்ருர்.

அரசன் மயக்கத்திலிருந்து விழித்தவன்போல, "என்ன அப்பா இது? நீ எதற்காகத் துறவு பூண வேண்டும்? யாரோ பைத்தியக்காரச் சோதிடர் வாய்க்கு வந்ததைச் சொன்னதற்காக நீ இப்படிச் செய்யலாமா? செங்குட்டுவன் உன் அருங்குணத்தை அறியாதவனு?" என்று கேட்டான்.

"நான் செய்வது பிழையாக இருந்தால் பொறுத் தருள வேண்டும். நான் துறவடைந்து ஞானம்

பெற்றால் இந்தக் குலத்துக்கே பெருமை. இந்த உறுதி மொழியை மாற்றுவது என்பது இனி இல்லை....... இதோ இப்போதே நான் இந்த அரண்மனையை விட்டுப் புறப்படுகிறேன். இனி எனக்கு இருப்பிடம் மடமோ, கோயிலோ ஆக இருக்கும்'' என்று சொல்லிப் புறப்பட்டு விட்டார் இளங்கோ.

அமைச்சர்கள் எழுந்தார்கள்; அவரைத் தடுத்து விடவேண்டும் என்று எண்ணம். ஆனால் அவர் களுக்குத் துணிவில்லை. அரசன், "என் செல்வா, என் கண்ணே!'' என்று அழைத்தானேயன்றி மேலே பேச முடியாமல் தடுமாறினான். செங்குட்டுவன் அலங்க மலங்க விழித்தான்.

இந்தக் கலவரத்தினிடையே, சோதிடம் கூறின பேர்வழி எப்படியோ, பெற்றேன் பிழைத்தேன் என்று ஒருவரும் அறியாமல் நழுவி விட்டார்.

அரண்மனையே துயரக் கடலில் மூழ்கியிருந்தது.

# 3. இரு பெரும் புலவர்கள்

வஞ்சிமா நகருக்கு மேற்கே கடல். வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் பெரிய கோட்டை வாயில்கள் இருந்தன. கிழக்குப் பக்கத்தில் ஒரு கோயில் இருந்தது. அதைக் குணவாயிற் கோட்டம் என்று யாவரும் சொல்வார்கள். பெருநம்பி இளங்கோவாக இருந்தவர் தம் பட்டத்தையும் அரண்மனை வாழ்வையும் உதறிவிட்டு அந்தக் கோட்டத்தில் துறவியாக இருந்தார். அரண்மனையை விட்டு வெளியேறினவர் வஞ்சி நகரை விட்டுச் சென்று யாரோ ஒரு துறவியிடம் துறவு பெற்றுச் சில காலம் அவருடன் இருந்தார். தம்முடைய அழகிய தலைமுடியை மழித்துவிட்டார். துறவிக்குரிய எளிய உணவை உண்டார்; எளிய உடையை உடுத்தார். உறக்கத்தையும் குறைத்தார். அடிக்கடி தியானத்தில் இருந்தார். தம்முடைய குருநாதருக்குத் தொண்டு செய்தார்.

அரண்மனையில் பலர் ஏவல் செய்ய, இனிதாக வளர்ந்து வந்த அந்த அரச குமரர், இப்போது தம் குருவுக்கு ஏவல் செய்தார். அறுசுவை உண்டி வேண்டும் போதெல்லாம் உண்டவர், இப்போது ஒரு வேளை சுருங்கிய உணவை உண்டார். நன்றாகக் கொழுகொழு வென்று வளர்ந்திருந்த அவர் திருமேனி மெலிந்தது. ஆனால் அதில் தவத்தேசு மிகுந்தது. அவர் முகத்தில் ஒளி பரவியது. கண்கள் சுடர்விட்டு ஒளிர்ந்தன. அவரை யார் கண்டாலும், "இவர் உண்மைத் துறவி" என்ற எண்ணம் உண்டாகும்படி இருந்தது அவர் தோற்றம்.

சிலகாலம் குருநாதரோடு இருந்த இளங்கோத் துறவி இப்போது குணவாயிற் கோட்டத்துக்கு வந்து விட்டார். முனிவராகிவிட்ட அவரை மக்கள் யாவரும் இளங்கோ அடிகள் என்று அழைத்தார்கள். வஞ்சிமா நகரிலுள்ளவர்களும் மற்ற ஊர்க்காரர்களும் அவரை வந்து கண்டு அவருடைய நல்லுரைகளைக் கேட்டுச் செல்வார்கள்.

முதுமையினாலும் தன் இளைய புதல்வர் துறவு பெற்றதைக் கண்டு மனம் உடைந்து போனமையாலும் நெடுஞ்சேரலாதன் நெடுநாட்கள் வாழவில்லை. அந்த ஒரு திறத்தில்மட்டும் சோதிடர் சொன்னது பலித்தது. நெடுஞ்சேரலாதன் உலக வாழ்வை நீத்தான். செங் குட்டுவன் அரியணை ஏறினான்.

செங்குட்டுவன் சிவபக்தன். வீரமும் அறிவும் நிரம்பியவன். தன் ஆட்சியில் எல்லாச் சமயத் தினரையும் வேறுபாடின்றி அவரவர்களுக்குரிய உதவி களைச் செய்துவந்தான். இளங்கோவடிகளுக்கு வேண் டியவற்றை அவர் அறியாமலே கிடைக்கும்படி செய் தான். அடிக்கடி அவரைக் கண்டு பேசினான். அவர் பிராயத்தால் இளையவரானாலும் நிலையால் உயர்ந்தவ ராதலின் செங்குட்டுவன் அவரிடம் பணிவாக நடந்து கொண்டான்.

இளங்கோவடிகள் பல மாணாக்கர்களுக்கு ஞான நூல்களையும் தமிழ் நூல்களையும் பாடம் சொல்லி வந்தார். சில சமயங்களில் வேறு ஊர்களுக்குப் போய் வந்தார்.

மதுரையில் இருந்த புலவர் சாத்தனார் செங்குட் டுவன் அரசனானபிறகு அடிக்கடி வஞ்சிமாநகரம் வந்து

அவனுடன் அளவளாவினர். தம்முடைய முதல் நண்பராகிய இளங்கோவடிகளைக் கண்டு பணிந்து தமிழ் இலக்கியம்பற்றிப் பேசி இன்புற்ருர். புலமை மிக்க இருவரும் பல பல பேசிப் பொழுது போக்கினர்கள். சாத்தனர் மதுரையில் நிகழும் சிறப்புக்களை எடுத்துச் சொல்வார். பழைய நூல்களிலுள்ள நயங்களைச் சொல்வார். தாம் பாடிய கவிகளைச் சொல்லிக் காட்டுவார். இளங்கோவடிகளும் தமிழ் இலக்கியத்தில் உள்ள அழகை எடுத்துச் சொல்வார். இவ்வாறு இருவரும் தமிழ் இன்பக் கடலில் அமிழ்ந்தனர்.

இளங்கோவடிகள் துறவியாகிவிட்டாலும் தமிழை விடவில்லை; தமிழ்ப் புலவரின் நட்பைத் துறக்கவில்லை. சாத்தனருக்கும் அவருக்கும் இடையே இருந்த நட்பானது பின்னும் இறுகியது. அதனுல் சாத்தனர் வஞ்சிமா நகருக்கு அடிக்கடி வரத் தலைப்பட்டார். என்ருவது அவர் மதுரையில் நினைத்தால் வஞ்சிமா நகருக்குப் பயணம் கட்டவேண்டியதுதான். இளங்கோவடிகளும் எப்போதாவது சாத்தனரைப் பார்க்க வேண்டுமென்று எண்ணினுல் உடனே திருமுகம் போக்குவார்; அதனைக் கண்டவுடனே சிறிதும் தாமதம் இன்றி மதுரைப் புலவரும் புறப்பட்டு வந்து சேருவார்.

சிறந்த புலவர் ஒருவர் மற்ருெரு சிறந்த புலவரோடு சேர்ந்து பழகும் பழக்கத்தினுல் கிடைக்கும் இன்பத்துக்கு ஈடாக இந்த உலகத்தில் வேறு எந்த இன்பமும் இல்லை. ஒருவருக்கொருவர் அன்பு செய்து மனம் கலந்து பழகுவார்களானுல், அவர்கள் இந்த உலகத்திலே சொர்க்க இன்பத்தைப் பெற்றுவிடு

கிருர்கள் என்றுகூடச் சொல்லிவிடலாம். மற்ருெரு சிறப்பும் உண்டு. இப்படி இரண்டு புலவர்கள் கூடிப் பேசும்போது அருகில் இருப்பவர்களுக்குக் கிடைக்கும் இலாபம் கணக்கில் அடங்காதது. பல நாட்கள் படித்தும் தெரிந்துகொள்ள முடியாத பல சுவையான பொருள்களை எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

இளங்கோவடிகளிடம் பாடம் கேட்கும் மாணுக்கர்களுக்கு இந்தச் சுவை நன்ருகத் தெரியவந்தது. சாத்தனர் வந்து விட்டாரென்ருல் அவர்களுக்குக் கட்டுக்கடங்காத ஊக்கமும் உவகையும் உண்டாகி விடும். அவரும் இளங்கோவடிகளும் கூடிப் பேசும் பேச்சிலே எத்தனை மணிகள் உதிரும்! எத்தனை தேன் துளிகள் சொட்டும்! அவற்றையெல்லாம் அருகி லிருந்து நுகர்கிறவர்கள் அல்லவா அவர்கள்?

ஒரு நாள் சாத்தனர் வஞ்சிமாநகருக்கு வந்திருந்தார். குணவாயிற் கோட்டம் வந்து இளங்கோவடிகளுடன் அளவளாவினர். தாம் புதியனவாக இயற்றிய கவிகளைச் சொல்லிக் காட்டினர். இளங்கோவடிகளும் தம்முடைய பாடல்களைச் சொன்னர். சாத்தனர், "ஏதாவது பெரிய நூலாக ஒன்றை இயற்ற வேண்டுமென்று எனக்கு ஆர்வம் உண்டாகிறது. தொடர்ந்த வரலாருக இருந்தால் சுவையாக இருக்கும். எதைப்பற்றி எழுதலாம் என்று யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். ஒன்றும் புலனுகவில்லை" என்ருர்.

"செய்ய வேண்டியதுதான். தமிழ் நாட்டுக்கு நல்வினைப் பேறு இருந்தால் உங்கள் பெரு நூல் அதற்குக் கிடைக்கும்" என்று இளங்கோவடிகள் அவர் கருத்துக்கு ஒத்துத் தம் கருத்தைக் கூறினர்.

"எனக்குமட்டும் சொல்லிக்கொள்வது அன்று இது. தங்கள் வாக்கும் அருமையாக இருக்கிறது. துண்டு துண்டாகப் பல பாடல்களை இயற்றுவதைக் காட்டிலும் தொடர்ச்சியாகப் பொருள் அமையும்படி ஒரு பெரிய நூல் இயற்றுவது நல்லது. தாங்களும் யோசித்துப் பார்க்கவேண்டும். ஏதேனும் பொருள் தோன்றினால் பாடத் தொடங்கலாம். இன்ன பொருளை வைத்துப் பாடலாம் என்று எனக்குப் பணித்தாலும் நான் பாடுகிறேன்" என்றார் சாத்தனார்.

"பார்க்கலாம். முதலில் நீங்கள் பாடுங்கள். நீங்கள் புலவர் பெருமான். பாடும் தகுதி உடையவர் கள்" என்று இளங்கோ சொல்லவே, இடைமறித்து, "என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? நீங்கள் மட்டும் புலவர் அல்லர் என்று யார் சொல்லுவார்கள்? நான் ஒரு வியாபாரி. தாங்கள் துறவி. இருந்தால் என்ன? இரண்டுபேருக்கும் தமிழ் ஒருங்கே உரியது. தாங்களும் பெருநூல் ஒன்றுவது பாட முயல்வது மிக மிக அவசியம்" என்று தீர்மானமாகச் சொன்னார் சாத்தனார்.

இவ்விருவரின் உரையாடலையும் கவனித்துக் கொண்டிருந்த மாணாக்கர்கள், "இரண்டு பெருமான் களும் இரண்டு பெருநூல் இயற்றித் தமிழ் மக்களுக்கு வழங்கினால் எப்படி இருக்கும்! இரண்டும் இரண்டு கண்களைப்போல, இரண்டு சுடர்களைப்போல, இரண்டு கடல்களைப்போல இருக்கும்" என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

# 4. மலை வளம்

சேரன் செங்குட்டுவன் வஞ்சிமாநகரில் இருந்தான். அவன் அரசனானபிறகு சில போர்களைச் செய்து வெற்றி பெற்றான். மேல் கடலில் சேரநாட்டிற்குச் சிறிது தூரத்தில் ஒரு பெருந் தீவில் கடம்பர் என்ற மன்னர்கள் ஆண்டு வந்தனர். தம்முடைய குலத்துக் குரியதாக ஒரு மரத்தைக் காப்பாற்றி வருவது பழங் கால வழக்கம். அந்த மரத்தைக் காவல் மரம் என்பார்கள். அதை யாரும் வெட்டாத வகையில் காத்து வருவார்கள். கடம்பர்களின் காவல் மரம் கடம்பு. அதனால்தான் அவர்கள் அப்பெயரைப் பெற்றார்கள்.

இந்தக் கடம்பர்களைச் சார்ந்தவர்கள் அடிக்கடி சேர நாட்டுக்கு ஓடங்களில் வந்து கொள்ளையிட்டார்கள். மக்களைத் துன்புறுத்தினார்கள். சில சமயங்களில் மரக்கலங்களிலும் வந்து புகுந்து கொள்ளையிட்டார்கள். அவர்கள் இருக்கும் தீவுக்குப் படையுடன் சென்று போரிடுவது எளிதாக இல்லை. இடையிலே உள்ள கடல் கொந்தளிப்புடையதாக இருந்தது.

அடிக்கடி கடம்பர்கள் கொடுத்துவந்த தொல்லையைச் செங்குட்டுவன் தெரிந்து கொண்டான். எப்படியாவது அவர்களைத் தொலைக்க வேண்டும் என்று உறுதி பூண்டான். கொந்தளிப்பான மேல் கடலில் போவதற்கு ஏற்ற வலிமையுள்ள கப்பல்களைக் கட்டச் செய்தான்.

முதலில் ஒற்றர்களை வலையர்களைப் போலக் கட்டு மரங்களில் அனுப்பிக் கடம்பர்களுடைய படைப் பலத்தை அறிந்து வரச் செய்தான். அவர்களுடைய

படை சிறியதுதான். சேரர் படைக்கும் அதற்கும், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை இருந்தது. ஆனால் அந்தக் கடம்பர்களுக்கு இயற்கையிலே ஒரு பெரிய பலம் இருந்தது. மேல் கடல் அவர்கள் தீவுக்குப் பெரிய அரணாக இருந்தது. மதிலுக்குப் புறம்பே அகழியை வெட்டி வைத்திருப்பார்கள். கடம்பர்களுக்கு இந்தக் கடலே ஆழங்காண முடியாத அகழியாகக் கிடந்தது.

கடலைக் கடந்து கடம்பர்களின் தீவுக்குச் சென்று விட்டால், பிறகு கடுமையான போர் செய்ய வேண்டியிராது என்ற உண்மையைச் சேர மன்னன் உணர்ந்தான். தீவிலுள்ள மக்கள் யாவரும் ஆளுக்கொரு படைக்கலம் ஏந்தி எதிர்த்து நின்றாலும் சேரன் படையை வெல்ல இயலாது.

இவற்றை அறிந்த செங்குட்டுவன் கடம்பர்களை வெல்ல வேண்டுமானால், படை வீரர்களை ஏற்றிக் கொண்டு, முரட்டு அலைகளை வீசும் கடலைத் தாண்டிச் செல்வது ஒன்றுதான் அரிய செயல் என்பதைத் தெரிந்து கொண்டான். இந்தப் போர் கடம்பர்களோடு செய்யும் போராக இருந்தாலும், உண்மையில் கடலோடு செய்வதாகத்தான் இருக்கும் என்பது அவனுக்குத் தெளிவாயிற்று. அதனால்தான் அகலமும் உறுதியும் உடைய கப்பல்களைக் கட்டச் செய்தான். கப்பல்களைக் கட்டி வைத்துக் கொண்டால், கடம்பரை வெல்வதற்கு மட்டுமா அவை பயன்படும்? வேற்று நாட்டுக்குச் சென்று வாணிகம் செய்யவும் அவை உதவும் அல்லவா?

கப்பல்களைக் கட்டி விட்டார்கள். படைகளை ஏற்றிக் கடம்பர் இருந்த தீவுக்குச் சென்று மன்னன் போர்

செய்தான். அது பெரும் போராக அவனுக்குத் தோன்றவில்லை. தன் படைத் தலைவன் ஒருவனை அனுப்பியிருந்தாலே போதும் என்று எண்ணினான். எளிதிலே கடம்பர்களை வென்றான். அவர்களுடைய காவல் மரமாகிய கடம்ப மரத்தை வெட்டி அதை வஞ்சிமா நகரத்துக்கு எடுத்து வந்தான். அதிலிருந்து ஒரு முரசு செய்யும்படி ஏவினான். கடம்ப மரத்தினால் அமைந்த அந்த முரசு, முழங்கும் போதெல்லாம் கடம்பர்களை வென்றவன் செங்குட்டுவன் என்பதை உணர்த்தியது.

இது மட்டும் அன்று; கடம்பர்களை வென்றதை விடக் கடலின் உறுமலுக்கு அஞ்சாமல் ஏற்ற வகையில் கப்பலைக் கட்டிச் சென்றது பெரிய வீரமாகத் தோன்றியது மக்களுக்கு. அதனால் யாவரும் அந்தச் செயலைப் பாராட்டினார்கள். கடம்பர்களை வென்றதை விடக் கடலைப் புறங்கண்ட பெருமையே பெருமை என்றார்கள். இதனால், "கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்" என்ற சிறப்புப் பெயர் அச்சேரமன்னனுக்கு அமைந்தது. பிறக்கு என்பது முதுகு என்னும் பொருள் உடைய சொல். "கடலை முதுகு காட்டச் செய்து ஓட்டிய செங்குட்டுவன்" என்பது அந்தப் பட்டத்துக்குரிய பொருள்.

படைகளை ஒழுங்குபடுத்திக் கப்பல்களைக் கட்டச் செய்து கடம்பர்களின்மேல் படையெடுத்துச் சென்று போரிட்டு வென்ற செங்குட்டுவன், சிறிது அமைதியாக இருக்க எண்ணினான். போர்க்களத்தில் பகைவர்களின் பிணங்களைக் கண்ட அவன், அழகிய காட்சி எதையாவது காணவேண்டுமென்று விரும்பினான்.

மலைப்பகுதிகளுக்குச் சென்று மலைவளங் கண்டு வரலாம் என்ற எண்ணம் உண்டாயிற்று. தன்னுடைய பட்டத்தரசியோடும் சென்று வருவதாக முடிவு செய்தான்.

அரசன் மலைவளம் காணச் செல்கிறான் என்பதை அறிந்த அதிகாரிகள் அதற்கு ஆவன செய்தார்கள். மன்னனுடன் யார் யார் செல்வது என்று வரையறை செய்தார்கள். அவனுடன் வேட்டையில் வல்ல சிலர் செல்லும்படி திட்டம் இட்டார்கள். அரசன் வருவதை முன்கூட்டியே மலைப்பக்கத்தில் வாழும் குடிமக்களுக்குச் சொல்லியனுப்பினார்கள்.

செங்குட்டுவன் மலைவளம் காணும் பொருட்டுப் புறப்பட இருந்தான். அப்போது மதுரையிலிருந்து சாத்தனார் வந்தார். அவரைக் கண்ட மன்னன், "நல்ல சமயத்தில் வந்தீர்கள்" என்றான்.

"நல்ல சமயமா? நான் மன்னர்பிரானைக் காணும் நேரம் யாவுமே நல்ல நேரமென்றே என் அனுபவத்தில் உணர்கிறேன்."

"அப்படி அன்று. இப்போது நான் மலைவளம் காணப் புறப்பட்டுக்கொண் டிருக்கிறேன். அங்கே உள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புறலாம் என்பது என் விருப்பம். நீங்களும் உடன் இருந்தால் அந்த இன்பம் பன்மடங்காகும். இயற்கையின் எழிலைப் புலவர்களைப் போலக் கண்டு களிப்பவர்கள் யார் இருக்கிறார்கள்?"

"அப்படியானால் மன்னர்பெருமானுக்கு என்னையும் உடன் அழைத்துச் செல்லத் திருவுள்ளமோ?"

"அதுதானே சொன்னேன், நல்ல சமயம் என்று?"

"இப்போது • விளங்குகிறது, யாருக்கு நல்ல சமயம் என்று. எப்போதும்போல் வந்த எனக்கு முன் பெல்லாம் கிடைக்காத காட்சி இப்போது கிடைக்கப் போகிறது.. இது எனக்கு நல்ல சமயம் என்பதில் சிறிதும் ஐயமே இல்லை."

"எப்படி ஆனாலும் சரி; வாருங்கள் போகலாம்" என்றான் சேரமன்னன்.

வஞ்சிமா நகரிலிருந்து மன்னனும் சாத்தனாரும் மன்னனுடைய பரிவாரத்தைச் சேர்ந்தவர்களும் புறப் பட்டார்கள். அவன் புறப்பட்டபோது இந்திரனே தன் பரிவாரங்களுடன் புறப்பட்டது போல இருந்தது.

மலைகளினிடையே வரும் பேராற்றின் கரையை அடைந்தான் மன்னன். ஆற்றின் இருமருங்கும் அடர்ந்த காடுகள்; அருகருகே வானைமுட்டிய மலைகள்; ஆற்றில் அங்கங்கே மணல் திட்டுக்கள். அங்கே பரிவாரத்தோடு தங்கினான் சேர அரசன். மலைப்பகுதி களில் உள்ள மகளிர் கைகோத்துக் குரவைக் கூத்து ஆடினார்கள். அப்போது அவர்கள் பாடும் பாடல் காற்றிலே மிதந்து வந்தது. மலையும் மலையைச் சார்ந்த இடங்களும் குறிஞ்சித்திணை என்று சொல்வது தமிழ் மரபு. அந்தத் திணைக்குத் தெய்வம் முருகக்கடவுள். அக்கடவுளுக்குப் பூசை போடுகிற பூசாரிக்கு வேலன் என்று பெயர். அவன் ஆவேசம் கொண்டு ஆடிப் பாடுவான். முருகனைத் துதித்து வேலன் பாடும் பாட்டும் அங்கே எதிரொலித்தது. ஒருபுறம் குறமகளிர் தினையைக் குத்தும்போது பாடும் வள்ளைப் பாட்டின்

இன்னிசை கேட்டது. ஒரு பக்கம் தினைப்புனம் காக்கும் பெண்கள் கிளிகளை ஓட்டிப் பாடும் ஆலோலப் பாடல்கள் கேட்டன. குறவர்கள் ஒரு பக்கம் முழங்கினர். வேறு ஓரிடத்தில் பறையை அடித்து ஒலி பரப்பினார்கள். புலியோடு சிலர் எதிர்த்துப் போராடும் அரவங்கூட ஓரிடத்தில் கேட்டது.

மரத்தின்மேலே பரணைக் கட்டிக் காட்டு விலங்குகளை ஓட்டும் வேடருடைய கூச்சல் ஒரு பக்கம் ஒலித்தது. காட்டு யானைகளைப் பிடிப்பதற்காகக் குழி வெட்டி மேலே கழிகளையும் தழைகளையும் வேடர்கள் பரப்பி யிருப்பார்கள். யானைகள் தெரியாமல் அந்தக் குழிகளில் வந்து விழுந்துவிடும். அவற்றைத் தந்திரமாகச் சங்கிலியால் பிணித்துக் கொண்டு வந்து பழக்குவார்கள். இவ்வாறு யானையைப் பிடிப்பவர்கள் போடும் ஆரவாரம் ஒரு பால் எழுந்தது.

இத்தகைய ஒலிகளையும் முழக்கங்களையும் மன்னனும் பிறரும் கேட்டார்கள். காட்டிலே கோங்க மரங்கள் வளர்ந்து நின்றன. அவற்றின் மலர்கள் பொன் தட்டை விரித்தாற் போல அழகாக இருந்தன. வேங்கை மரங்கள் நிறையப் பூத்து நின்றன. அந்த மரங்களின் அடியில் பூக்கள் உதிர்ந்து கிடந்தன. தூரத்திலிருந்து பார்த்தால் ஏதோ வேங்கை ஒன்று அங்கே படுத்துக் கிடப்பது போலத் தோன்றியது. சுரபுன்னை மரங்கள் ஒரு பக்கம் அடர்ந்து வளர்ந்திருந்தன. பெருங்குன்றிமணி யாகிய மஞ்சாடி மரங்கள் கொத்துக் கொத்தாகச் சிவந்த வித்துக்களை ஏந்திக்கொண்டு விளங்கின. நன்றாக வயிரமேறிய சந்தன மரங்கள் காடாக ஒரு பக்கம் வளர்ந்திருந்தன.

தேக்கும் திமிசும் கருங்காலியும் கடம்புமாக எத்தனை எத்தனையோ மரங்கள், செடிகள், கொடிகள்! வண்ண வண்ணப் பூக்கள்! சில மரங்களில் இலைகளும் தளிர்களுமே மலரைப் போல வண்ணம் பெற்றுக் கண்ணைப் பறித்தன.

இந்தக் காட்சிகளைக் கண்டு யாவரும் மகிழ்ந்தார்கள். புலவராகிய சாத்தனார் ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனித்தார். அவற்றின் அழகிலே சொக்கிப் போனார்.

செங்குட்டுவன் பேராற்றங்கரைக்கு வந்து தங்கியிருக்கும் செய்தியை மலைவாழ் மக்கள் அறிந்தார்கள். பெரிய கூடாரங்களை அமைத்து அவனும் அவனுடன் வந்தவர்களும் தங்கியிருந்தார்கள். அவன் வருவது முன்பே அவர்களுக்குத் தெரிந்த செய்திதான். ஆதலின் அவர்கள் கூட்டமாகத் தங்கள் மன்னனைக் காணப் புறப்பட்டார்கள்.

காட்டில் தங்களுக்குக் கிடைக்கும் பொருள்களைக் கையுறையாக ஏந்திக்கொண்டு அவர்கள் வந்தார்கள். பேராற்றங்கரையில் அவர்கள் காணிக்கைகளுடன் வந்து நின்ற காட்சியே அவர்களுக்கு இருந்த அன்பைக் காட்டியது. அவர்கள் வரிசையாக நிற்பதைக் கண்டார் சாத்தனார். "வஞ்சிமா நகர் அரண்மனை முற்றத்தில் அரசர்பிரானுடைய காட்சிக்காகத் திறையுடன் சிற்றரசர்கள் காத்து நிற்பதுபோல அல்லவா இருக்கிறது, இந்தக் காட்சி?" என்று வியந்தார்.

"அந்த அரசர்கள் மன்னர்பெருமானைக் கண்டு அஞ்சுபவர்கள்; அவர்கள் உள்ளத்தில் உண்மையன்பு

இருக்குமென்று சொல்ல இயலாது. ஆனால் இந்த மலைவாணர்களோ அன்பே உருவமானவர்கள்" என்று ஓர் அமைச்சர் சொன்னார்.

மன்னன் கூடாரத்துக்குவெளியே வந்து அங்கே நின்றிருந்த மக்களைக் கண்டான். அவர்கள் எத்தனை வகையான பண்டங்களைச் சுமந்துகொண்டு நின்றார்கள்! யானைத் தந்தத்தை ஒருவன் ஏந்தி நின்றான். வயிரம் பாய்ந்த அகிலின்கட்டு ஒன்றை ஒருவன் வைத்திருந்தான். சந்தனக் கட்டைகளும், சிந்துரக் கட்டியும், அரிதாரமும் சிலர் ஏந்தியிருந்தார்கள். கவரிமான் மயிரும் தேன்குடங்களும் சிலர் கொண்டு வந்திருந்தனர். ஏலக்காய்களும், மிளகுக் கொத்தும், கூவைக்கிழங்கின் மாவும், கவலைக் கிழங்கும் சிலர் கொணர்ந்திருந்தனர். தேங்காயைச் சிலர் சுமந்துவந்தனர். மாம்பழத்தைச் சிலர் கொணர்ந்தனர். சிலர் பலாப்பழங்களைத் தாங்கி வந்தனர். பச்சிலைமாலை, வெள்ளுள்ளிப் பூண்டு, பூங்கொடி, பாக்குக் குலை, வாழைக் குலை ஆகியவற்றைத் தாங்கி வந்தவர்கள் பலர். இவை யாவும் மரஞ்செடி கொடிகளிலிருந்து கிடைத்தவை.

வேறு சிலர் குட்டியான விலங்குகளைக் காணிக்கையாகக் கொண்டுவந்திருந்தார்கள். சிங்கக் குட்டியை ஒருவன் கொண்டுவந்திருந்தான். புலிக் குட்டி, யானைக் கன்று, குரங்குக் குட்டி, கரடிக் குட்டி, மலையாட்டுக்குட்டி, மான் குட்டி, கத்தூரி மிருகக்குட்டி, கீரிப்பிள்ளை, புனுகுபூனை - இப்படிப் பல குட்டிகள் அங்கே இருந்தன. சிலர் மயிலைக்கொணர்ந்தனர். சிலர் காட்டுக் கோழியை வழங்கக் கொண்டுவந்திருந்தனர். கிளியைச் சிலர் தாங்கி நின்றனர்.

## 31

இப்படி வேறு வேறு கையுறைகளைத் தாங்கிக் கொண்டு, "ஏழு பிறப்பும் மன்னர் பிரானுக்குக் குடி மக்களாக இருக்க ஆசைப்படுகிறவர்கள் நாங்கள். மன்னர்பிரான் வாழ்க! வெல்க!" என்று வாழ்த்தினார்கள். அந்த வாழ்த்தொலி மலைப்பக்கங்களில் எதிரொலித்தது.

# 5. சேரமான் தீர்மானம்

தன்முன் நின்ற மலைவாழும் மக்களைப் பார்த்து, "நீங்கள் யாதொரு குறைவும் இன்றி வாழ்கிறீர்களா?" என்று கேட்டான் அரசன்.

"மன்னர்பிரான் அருளால் எங்களுக்கு ஒரு குறைவும் இல்லை" என்று அவர்கள் ஒரே குரலாய்ச் சொன்னார்கள்.

அப்போது அந்தக் கூட்டத்தில் ஏதோ சிறு சலசலப்பு ஏற்பட்டது. சிலர் தங்களுக்குள் ஏதோ மெல்லப்பேசிக்கொண்டார்கள். எதையோ அரசனிடம் சொல்லத் தயங்குவதுபோல இருந்தது.

"வேறு ஏதாவது சொல்ல வேண்டியது உண்டா?" என்று செங்குட்டுவன் கேட்டான்.

அப்போது முதியவன் ஒருவன் முன்னே வந்து நின்று, "அரசர் பெருமானிடம் நாங்கள் கண்ட அற்புதக் காட்சி ஒன்றைச் சொல்ல வேண்டும். அதோ அங்குள்ள முருகனுக்குரிய மலையில் ஒரு வேங்கை மரத்தின் கீழே ஒரு பெண்மணி வந்து நின்றாள்" என்று சொல்லத் தொடங்கினான்.

அரசன் இடைமறித்து, "அதில் என்ன வியப்பு இருக்கிறது?" என்று கேட்டான்.

"அதைத்தான் சொல்ல வருகிறேன். அந்தப் பெண்மணி ஒற்றை மார்போடு மிக்க துயரமுடையவளாய் நின்றபோது, அவளுடைய கணவன் வானிலிருந்து வந்தான். அவனோடு அவள் வானகம் சென்றுவிட்டாள். தேவர்களெல்லாம் அவர்களைப் போற்றி

ஞர்கள். இதுவரையில் இப்படி ஒரு காட்சியை நாங்கள் கண்டதில்லை'' என்று அந்த முதியவன் கூறினன்.

"அந்தப் பெண்மணி எங்கிருந்து வந்தாள், தெரியுமா?'' என்று அரசன் கேட்டான்.

"எந்த நாட்டுப் பெண்மணியோ? யாருடைய மகளோ? ஒன்றும் அறியோம்'' என்ருன் அவன்.

அப்போது அருகில் நின்றுகொண்டிருந்த புலவர் சாத்தனுர், "எனக்கு அந்தப் பெண்மணியின் வரலாறு தெரியும்'' என்று சொல்லத் தொடங்கினுர்.

"இந்தப் பெண்மணி மாபெரும் பத்தினி. கண்ணகி என்னும் பெயர் உடையவள். இவள் காற்சிலம்பைக் கொண்டுபோய் விற்று வரலாமென்று இவள் கணவன் மதுரைக்குச் சென்ருன். பாண்டிய மன்னனுடைய தேவியின் சிலம்பு ஒன்று திருட்டுப் போயிருந்தது. இதுதான் அந்தச் சிலம்பு என்று ஒரு பொற்கொல்லன் சொல்ல, அதைக் கேட்ட பாண்டியன் அவனைக் கொல்லச் செய்தான். தன் கணவன் கொலையுண்டதைக் கேட்ட இந்தப் பத்தினி ஒற்றைச் சிலம்புடன் பாண்டிய மன்னனிடம் சென்று அவன் செய்த பிழையை எடுத்துச் சொன்னுள். பிறகு இந்த ஊரை எரித்துவிடுகிறேன் என்று சபதம் செய்து புறப்பட்டுத் தன் ஒரு மார்பைத் திருகி நகரின்மேல் வீசினுள். அதனுல் மதுரை தீப்பற்றி எரிந்தது. தன்னுடைய பிழையை உணர்ந்தவுடன் பாண்டிய மன்னன் உயிரை விட்டான். அவனுடைய அரசி தன் உயிரைக் கொண்டு அவன் உயிரைத் தேடினவளைப்போல அவனுடனே மாய்ந்தாள். மதுரையைச் சுட்ட பத்தினி தன் நாடாகிய சோழநாட்டுக்குக் கணவன் இல்லாமல்

தனியாகச் செல்ல விரும்பாமல் சேரநாட்டை அடைந்தாள். மன்னர் பிரானுடைய நாட்டுக்கு வந்த சிறப்பால் மீண்டும் தன் நாயகனுடன் கூடித் தேவ லோகம் அடைந்தா ளென்று இவர்கள் சொன்னதனுல் தெரியவருகிறது.''

புலவர் கண்ணகியாகிய பத்தினியின் வரலாற்றைக் கூறியபோது யாவரும் ஆவலுடன் கேட்டார்கள். கேட்ககேட்க இரக்கமும் வியப்பும் உண்டாயின.

செங்குட்டுவன் முகம் வாட்டம் அடைந்தது. "பாண்டிய மன்னன் செய்த பிழையால் வளைந்த கோலை அம்மன்னன் உயிர் சென்று நிமிர்த்திச் செங்கோலாக்கிவிட்டது. அவன் அறிந்து செய்த பிழை அன்று அது. மன்னர் பதவி சிறந்ததென்றும், இன்பம் தருவதென்றும் பலர் எண்ணுகிருர்கள். அதில் எத்தனை தொல்லைகள்! மழை சரியாகப் பெய்யாவிட்டால், குடிமக்கள் மன்னனைக் குறை கூறுவார்கள். செங்கோல் மன்னனுக இருந்தாலல்லவா மழை பொழியும் என்பார்கள். அதனுல், மழை இல்லாத போது மன்னர்கள் என்ன பழி வருமோ என்று அஞ்சுவார்கள். யாருக்காவது துயரம் வந்தால் அதற்கும் அரசன்தான் பிணை என்பார்கள். குடிகளைக் காப்பாற்றிக் கொடுங்கோல் இன்றி நேர்மையான முறையில் ஆட்சி புரிய வேண்டும். ஆகவே, மன்னர் குடியில் பிறப்பது துன்பத்துக்குக் காரணமாகுமேயன்றி இன்பம் தருவதன்று. நான் சொல்லுவது சரி தானே?'' என்று அவன் சாத்தனுரை நோக்கிக் கேட்டான். சாத்தனுர் ஒன்றும் பேசவில்லை.

பிறகு தன் பட்டத்தரசியைப் பார்த்து, ''புலவர் சொன்ன கதையைக் கேட்டாயே! தன் கணவனது

உயிர் பிரிந்தது கண்டு உடனே உயிர் நீத்தாள் பாண்டியன் மனைவி. இந்தப் பத்தினியோ மதுரையை எரித்துவிட்டு வந்தாள். இந்த இருவரிலும் நீ வியப்பதற்கு உரியவள் யார்?'' என்று கேட்டான்.

அதற்கு மாபெருந் தேவி, ''கணவனுடைய துயரத்தைக் கண்டு பொறுமல் உயிரை நீத்தவள் வானுலகத்தில் சிறப்பை அடையட்டும். அவள் நிலையைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. ஆனால் நம்முடைய நாட்டைத் தேடி வந்த இந்தப் பத்தினிக் கடவுளை நாம் வழிபட வேண்டும்'' என்ருள்.

அது கேட்ட மன்னன் சிறிது சிந்தனையில் ஆழ்ந்தான். கண்ணகியாகிய பத்தினிக்குக் கோயில் எடுத்து வணங்கவேண்டும் என்பதையே தன் மனைவி குறிப்பித்தாள் என்று தெரிந்து கொண்டான். அருகில் இருந்த அமைச்சர்தலைவனைப் பார்த்தான். அவன் அரசனது குறிப்பை உணர்ந்துகொண்டான்; ''ஆம், பத்தினிக் கடவுளைக் கொண்டாடுவது நம் கடமை'' என்ருன்.

''எப்படிக் கொண்டாடுவது?'' என்று அரசன் கேட்டான்.

''சிலை செய்து வழிபடலாமே!'' என்று அமைச்சன் கூறவே, ''எவ்வாறு சிலை செய்வது?'' என்று மீட்டும் கேட்டான் மன்னன்.

''தமிழகத்தில் உள்ள பொதியில் மலையிலிருந்து கல் எடுத்து வந்து பத்தினிப் படிமத்தை வடிக்கச் சொல்லலாம்; அல்லது சேர மன்னர்கள் முன்பே தம்முடைய வில் கொடியைப் பொறித்து வைத்திருக்கும்

இமயமலையிலிருந்தும் கல்லை எடுத்து வரலாம். படிமம் செய்யக் கொணரும் கல்லைச் சில காலம் தூய நீரிலே போட்டுவைக்க வேண்டும் என்பார்கள். இவ்வாறு செய்வதை நீர்ப்படை என்று பெரியோர் கூறுவர். நீர்ப்படைக்குச் சிறந்தவை கங்கையாறும் காவிரி யாறும்'' என்று அமைச்சன் சொன்னான்.

''அருகிலுள்ள பொதிய மலையிலிருந்து கல்லை எடுத்து வந்து காவிரி நீரில் போட்டுவைக்கும் காரியம், வீரமுடைய குலத்திற் பிறந்தவருக்குப் புகழைத் தருவ தன்று. இமயமலைக்கே சென்று பத்தினித் தெய்வத் துக்கு ஏற்ற கல்லை எடுத்து வருவோம். பத்தினி உருவம் வடிப்பதற்கு ஏற்ற கல்லை இமய அரசன் தராவிட்டால், போர் செய்து வீரங்காட்டி வெற்றிமாலை சூடிக் கொண்டு வருவேன்'' என்று ஊக்கத்துடன் கூறினான் அரசன்.

அருகில் நின்றிருந்த வில்லவன் கோதை என்னும் அமைச்சன், ''மன்னர் பெருமானுடைய வீரத்தை வட நாட்டு மன்னர் யாவரும் அறிவார்கள். ஆதலின், இமயமலையில் கடவுள் உருவைச் சமைக்கக் கல் எடுக்கும் பொருட்டு வருவதாக எல்லா அரசர்களுக்கும் ஓலை போக்க வேண்டும்'' என்றான்.

அங்கே இருந்தவர்களில் அழும்பில் வேள் என்ற சிற்றரசரும் ஒருவர். அவர் மன்னனை நோக்கி, ''அரசே, ஒவ்வோர் அரசனுக்கும் ஓலை போக்குவ தென்பது எளிதில் நிறைவேறாத செயல். காலமும் மிகுதியாக ஆகிவிடும். ஆதலின் அது செய்வது இன்றியமையாததா என்பதை யோசிக்க வேண்டும்'' என்றார்.

"வேறு எப்படி அவர்களுக்கு நாம் வருவதை அறிவிப்பது?"

"வஞ்சி மாநகரில் நமக்குத் தெரியாமல் பல நாட்டு ஒற்றர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் செய்தி தெரியுமானால் தங்கள் அரசர்களிடம் போய்ச் சொல்வார்கள். ஆதலால் நாம் நகரம் சென்று அங்கே வீதிகளில் முரசறைந்து செய்தியை அறிவிக்கும்படி செய்தால் போதுமானதென்று நினைக்கிறேன்" என்று காரணத்துடன் விடை கூறினார், அழும்பில் வேள். மன்னன் அந்தக் கருத்தை ஒப்புக்கொண்டான்.

காணிக்கைகளை வைத்துத் தாம் கண்ட அதிசயத்தையும் சொல்லிவிட்டு விடை பெற்றுக்கொண்டு சென்றார்கள், மலைப்பகுதியிலிருந்தும் காட்டிலிருந்தும் வந்த மக்கள். அரசனும் தன் பரிவாரத்துடன் வஞ்சி மாநகருக்கு மீண்டான்.

நகரை அடைந்தவுடன் முதல் வேலையாக யானை மீது முரசறைந்து செய்தியை அறிவிக்கச் சொன்னான். அப்படி அறிவிக்கும் பணியைச் செய்வதற்குரியவர்கள், "சேர மன்னன் வாழ்க! எம் கோ பல்லாண்டு வாழ்ந்து உலகத்தைக் காப்பாற்றட்டும்! முன்பே சேர மன்னர்கள் தம் அடையாளச் சின்னமாகிய வில்லைப் பொறித்துள்ள இமயமலைக்குச் சென்று, எம் அரசர் பிரான் கடவுள் விக்கிரகம் அமைக்கும் பொருட்டுக் கல் எடுக்க வரப்போகிறான். வடதிசையில் உள்ள மன்னர்கள் எல்லாம் காணிக்கைகளுடன் வந்து எதிர்கொண்டு அழைப்பார்கள் என்று நம்புகிறோம். இல்லையானால் சேரமன்னனுடைய வீரத்துக்கு முன் எதிர்

நிற்கமாட்டாமல் தோல்வியுற வேண்டி யிருக்கும்; உயிரையே இழந்துவிட நேரும்; இல்லையானால் துறவிகளாகி வீட்டையும் உறவினரையும் துறந்து வாழ வேண்டியதுதான். அரசர்பெருமான் சேனை அவனுடைய திருமேனிக்கு ஒப்பானது. அது வாழ்க!'' என்று கூறி முரசை முழக்கினார்கள்.

இவ்வாறு முரசு அறையக் காரணமாக இருந்த கண்ணகியின் வரலாற்றைச் சாத்தனார் வாயிலாகக் கேட்டவர்கள், வஞ்சி மாநகர் வந்தவுடன் அந்த நகரில் உள்ளவர்களுக்கும் தனித்தனியே தெரிவித்தார் கள். அதனைக் கேட்ட நகர மாந்தர், "இப்படியும் இக்காலத்தில் நடக்குமோ? இது பெரிய அற்புதம்!'' என்று கூறி வியப்படைந்தார்கள்.

"அப்படியானால், வஞ்சிமா நகரில் ஒரு பத்தினித் தெய்வத்தின் திருக்கோயில் எழப்போகிறது என்பது உறுதியாயிற்று. வெல்க நம் மன்னவன் வீரம்!'' என்று மக்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

# 6. மூன்று உண்மைகள்

செங்குட்டுவனோடு மலைவளம் காணச் சென்ற தண்டமிழ்ப் புலவராகிய சாத்தனார் அவனுடன் வஞ்சிமா நகர் வந்தார். தம்முடைய நண்பராகிய இளங்கோவடிகளைக் கண்டு வரலாமென்று அவர் இருந்த குணவாயிற் கோட்டத்துக்குச் சென்றார். அப்போது அங்கே குன்றில் வாழும் மக்கள் பலர் கூடி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்கள். இளங்கோவடிகள் அவர்கள் சொல்வதை மிக்க ஆர்வத்துடன் கேட்டுக்கொண் டிருந்தார். அடிகள் சாத்தனாரைக் கண்டவுடன், ''வாருங்கள், வாருங்கள்! எப்போது வந்தீர்கள்? இப்படி அமருங்கள்'' என்றார்.

''நான் வந்து சில நாட்கள் ஆயின. மன்னர் பெருமானுடன் மலைவளம் காணச் சென்றிருந்தேன். இவர்களைப் பார்த்தால் மலையில் வாழும் மக்களைப் போலத் தோற்றுகிறார்கள். மலைவளம் காணப் போயிருந்தபோது இவர்களைப் போன்றவர்களை அங்கே கண்டோம். அவர்கள் தாங்கள் கண்ட ஓர் அற்புத நிகழ்ச்சியைச் சொன்னார்கள்'' என்று சொல்லி அமர்ந்தார் புலவர்.

''இங்கேயும் இவர்கள் ஏதோ அற்புத நிகழ்ச்சி யைத்தான் சொல்ல வந்தார்கள். சொல்லத் தொடங் கும்போதே நீங்கள் வந்துவிட்டீர்கள். நீங்களும் கேளுங்கள்'' என்று சொன்ன இளங்கோ, எதிரே நின்றிருந்தவர்களைப் பார்த்து, ''நீங்கள் கண்டதைச் சொல்லுங்கள்'' என்றார்.

அவர்கள் சொல்லத் தொடங்கினார்கள்; "திருச் செங்குன்றத்தில் மஞ்சள் பூக்கள் பூத்துக் குலுங்கும் வேங்கை மரம் ஒன்று உண்டு. அதன் அடியில் ஒரு பத்தினி நின்றிருந்தாள். அவள் மார்பு ஒன்றை இழந்த கோலத்தோடு நின்றாள். அப்போது வான விமானத்தில் அமரர்க்கு அரசனாகிய இந்திரன் அவளுடைய கணவனையும் அமரலோகத்தி லிருந்து அழைத்து வந்து அவளுக்குக் காட்டி, அவளையும் விமானத்தில் ஏற்றிக்கொண்டு வானுலகு சென்றான். இந்தக் காட்சியை எங்கள் கண்களாலே கண்டோம். மிக மிக வியப்பான காட்சி இது. எங்கும் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. இதைத் தவமுனிவராகிய தங்களிடம் சொல்லிச் செல்லலாம் என்று வந்தோம்" என்றார்கள்.

இளங்கோவடிகள், மிக்க ஆச்சரியத்துடன், "புலவர் பெருமானே, கேட்டீர்களா? நீங்கள் கேட்ட செய்தியும் இதுதானே?" என்றார்.

"ஆம்; இதே நிகழ்ச்சியைத்தான் மன்னர் பெருமானும் நானும் கேட்டோம். அந்தப் பத்தினியின் வரலாறு எனக்குத் தெரியும். மதுரையில் நிகழ்ந்தது தானே?" என்றார் புலவர்.

"அப்படியா? நடந்தது என்ன? விரிவாகச் சொல்லுங்கள்" என்று முனிவர் கேட்கப் புலவர் சொல்லலானார்.

"சோழ நாட்டில் உள்ள பூம்புகாராகிய காவிரிப் பூம்பட்டினமே அந்தப் பத்தினித் தெய்வத்தின் ஊர். அவ்வூரில் கோவலன் என்று ஒரு வணிகன் இருந்தான். அவன்தான் இவளுடைய கணவன்.

அவன் அவ்வூரில் இருந்த நாடகக் கணிகையாகிய மாதவி என்பவளிடம் காதல் கொண்டு அவளுடனே இருந்து வந்தான். அவளுக்குத் தன் செல்வத்தை யெல்லாம் கொடுத்து இழந்தான். மேலும் கொடுக்கப் பொருள் இல்லாமையால் தன் வீடு வந்தான். தன் மனைவி கண்ணகியின் காற்சிலம்பை விற்றுப் பிழைக் கலாம் என்ற எண்ணத்துடன் அவளையும் அழைத்துக் கொண்டு பாண்டி நாட்டை அடைந்தான். மதுரைமா நகரில் கடைவீதியில் சிலம்பை விற்கச் சென்றான். அப்போது, அரசியின் பொற்சிலம்பு ஒன்றை மறைத்து வைத்துத் திருட்டுப்போயிற்று என்று அரசனிடம் சொல்லியிருந்த பொற்கொல்லன் ஒருவனைக் கண்டான். அவனிடம் சிலம்பைக் கோவலன் காட் டவே அவன், 'இந்தச் சிலம்பை அணியும் தகுதி பாண்டியனுடைய பட்டத்தரசி ஒருத்திக்குத்தான் உண்டு. நீ இங்கே இரு. நான் அரண்மனை சென்று சொல்லிவிட்டு வருகிறேன்' என்றுகூறிச் சென்றான்.

"பொற்கொல்லன் அரசனிடம் சென்று, 'சிலம்பு திருடின கள்வனைக் கண்டுபிடித்துவிட்டேன்' என்றான். அதைக் கேட்ட அரசன், காவலரை அழைத்தான். 'இவன் சொன்ன அந்தக் கள்வனைக் கொல்ல, சிலம்போடு அவனை இப்பொழுதே இங்கே கொண்டு வாருங்கள்' என்று சொல்ல எண் ணியவன், ஏதோ நினைவில் ஆழ்ந்திருந்ததனாலும் ஊழ்வினை வந்து விளைகிற காலமாதலினாலும், "அவ னைக் கொன்று சிலம்பை இப்போதே கொண்டு வாருங் கள்" என்று சொல்லிவிட்டான்.

"காவலர் அவ்வாறே சென்று கோவலனைக் கொன்றுவிட்டார்கள். அவன் கொலையுண்டதை

அறிந்த கண்ணகி பத்தினியாகலின் துயரில் ஆழ்ந்து நேரே மன்னனிடம் போனுள். அவனிடம் நடந்ததைச் சொல்லி நிற்க, அவன் தன் உயிரை விட்டான். பின்பு மதுரை வீதியிற் சென்று தன் கற்புத் திறத்தால் மாநகரை எரியுண்ணச் செய்தாள். இக் குறவர்கள் சொன்ன பத்தினி அந்தப் பெருமாட்டியே!'' என்று கூறி முடித்தார்.

கவனத்துடன் இதைக் கேட்டுக் கொண்டிருந்த இளங்கோவடிகள், ''ஊழ்வினை விளையும் காலம் என்றீர்களே; அது என்ன? உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டார்.

''நான் அதை அறிந்துகொண்டதும் ஓர் அற்புதந்தான். மதுரையில் இறைவன் எழுந்தருளியிருக்கும் வெள்ளியம்பலத்தில் நான் துயின்று கொண்டிருந்தேன். அப்போது இருள் செறிந்திருந்தது. ஏதோ பேச்சரவம் கேட்டது. நான் விழித்துக் கொண்டு கவனித்தேன். வீர பத்தினியாகிய கண்ணகியின்முன் மதுரை மாநகரின் காவல் தெய்வம் தோன்றி, 'நீ மிக்க சினத்தால் இந்த நகரை எரியுண்ணச் செய்தாய். உங்களுக்கு இந்தத் துன்பம் விளைந்ததற்குக் காரணம் முன்பிறப்பில் ஒரு பெண் இட்ட சாபமே' என்று கூறினுள்.''

''அந்தச் சாபத்துக்குக் காரணம் யாது? சாபம் என்ன? உங்களுக்குத் தெரிந்தால் சொல்லவேண்டும்'' என்று இளங்கோவடிகள் மீட்டும் வினவினுர்.

''நன்ருகத் தெரியும்; மதுரைத் தெய்வம் சொல்லக் கேட்டதனுல் எனக்கு அது தெரிந்தது. சொல்

கிறேன்'' என்று அந்த வரலாற்றை விரித்து உரைக்க லாஞர்; "கலிங்க நாட்டில் சிங்கபுரம் என்ற ஊரில் வசு என்னும் வேந்தன் ஒருவன் இருந்தான்; அந்த நாட்டில் கபிலபுரம் என்னும் வேறு ஊரில் குமரன் என்ற வேந்தன் இருந்தான். இவ்விருவரும் தாயாதிகள். இருவரும் ஒருவருக்கு ஒருவர் பகை கொண்டிருந்தனர். ஒருவர் நாட்டிலிருந்து மற்ருெருவர் நாட்டுக்கு யாரும் செல்வதில்லே.

"கபிலபுரத்தில் இருந்த சங்கமன் என்னும் வணிகன் அணிகலன்களே விற்கிறவன். சிங்கபுரத்தில் செல்வர்கள் பலர் வாழ்ந்ததனுல், அங்கே சென்ருல் நல்ல வியாபாரம் ஆகும் என்று அவன் எண்ணினன். தன் மனேவியையும் அழைத்துக்கொண்டு அந்த நகரம் சென்று ஆபரணங்களே வியாபாரம் செய்யத் தொடங்கினன். சிங்கபுரத்து அரசனுகிய வசுவினிடம் அரசியல் அதிகாரியாக இருந்தான், பரதன் என்பவன். அவன் தீய குணமுடையவன். அவனுக்குச் சங்கமனேக் கண்டாற் பிடிக்கவில்லே. அணிகலன்களே விலேயின்றியே தனக்கு வழங்க வேண்டுமென்று கேட்டிருப்பான்போலும்! சங்கமன் அளிக்காமையினுல் அவனுக்குத் தீங்கு புரிய எண்ணினன் பரதன். அவன் அரசியல் பணி புரிகிற அதிகாரம் உடையவன் அல்லவா? அரசனிடம் சென்று, 'இந்தச் சங்கமன் கபிலபுரத்தி லிருந்து வந்து இங்கே வாழ்கிருன். ஆபரணங்களே விற்பவனேப் போல இருந்து தொழில் நடத்தினுலும், நம்முடைய பகையரசனுகிய வசுவுக்கு இங்குள்ள இரகசியங்களேத் தெரிந்து சொல்லி அனுப்பும் ஒற்றன் இவன். இவனுல் இந்த நாட்டுக்கும் அரசராகிய தங்களுக்கும் தீங்கு நேரும்' என்ருன். வசுவி

னிடம் பகைமை கொண்டிருந்த அரசன், 'அவனை இந்த நாட்டைவிட்டுத் துரத்திவிடு' என்றான். 'இவன் செய்துவரும் குற்றத்துக்கு அந்தத் தண்டனை போதாது. இவனைத் துரத்திவிட்டால் வேறு உருவத்தில் இன்னும் யாரேனும் வந்து சேருவார்கள். ஆகையால் இனி யாருமே இப்படி வந்து வஞ்சகம் செய்யாதபடி, கடுமையான தண்டனை விதிக்க வேண்டும்' என்று பரதன் கூறினான். 'அப்படியானால் சிறையில் அடைத்துவிடலாமா?' என்று அரசன் கேட்டான். 'அந்தத் தண்டனையும் போதாது. இவனைக் கொன்று விடுவதுதான் தக்கதாகும்' என்று கூசாமல் சொன்னான் பரதன். அரசனும், 'அப்படியே செய்து விடு' என்று சொல்லிவிட்டான். பரதன் சங்கமனைக் கொலை செய்யும்படி ஏற்பாடு செய்தான். குற்றம் சிறிதும் இல்லாத வணிகன் கொலையுண்டான்.

"அந்தச் சங்கமனுடைய மனைவியாகிய நீலி என்பவள் தன் கணவன் கொலையுண்டதை அறிந்து கதறினாள்; புலம்பினாள். 'அரசனே! இது முறையாகுமா? ஊர்க்காரர்களே! இது நியாயமா? இந்தத் தெருவில் வாழ்பவர்களே! இது நீதியா?' என்று பல இடங்களிலும் சென்று முறையிட்டாள். இப்படிப் பதினான்கு நாட்கள் துயரம் தாங்காமல் அலைந்து புலம்பித் திரிந்தாள்; பதினாலாவது நாள் ஒரு மலையில் ஏறி உயிரை விட்டுத் தன் கணவனுடன் மறு உலகத்தில் சேர எண்ணினாள். அதற்காக ஒரு மலையில் ஏறி, கீழே விழுவதற்கு முன், 'எங்களுக்கு இந்தத் துயரத்தை உண்டாக்கியவர்கள் யாரோ அவர்கள் இந்தப்போன்ற துயரத்துக்கு ஆளாகட்டும்!' என்று

சாபமிட்டு விழுந்து இறந்துபோனாள். அவள் இட்ட சாபந்தான் இப்படி வந்து பலித்தது. பரதன் என்னும் அதிகாரியே கோவலனாகப் பிறந்தான். பரதனுடைய மனைவியே கண்ணகியாகப் பிறந்தாள்.''

"மிகவும் சோகமான கதை. இதையா மதுரைத் தெய்வம் வீரபத்தினிக்கு உரைத்தது ?'' என்று, இதுகாறும் கேட்டுக் கொண்டிருந்த இளங்கோவடிகள் வினவினார்.

"இந்தக் கதையைக் கண்ணகியிடம் சொல்லி விட்டு, 'அந்த வணிகன் மனைவி இட்ட சாபத்தால் இது நிகழ்ந்தது. இன்னும் பதினான்கு நாட்கள் சென்றால் உன் கணவன் வருவான். அவனை வானோர் வடிவிலே காணலாமே யன்றி, இனி மனித உருவத்தில் காண முடியாது' எனக் கூறி மறைந்தது அந்தத் தெய்வம்'' என்று எஞ்சியிருந்த நிகழ்ச்சியையும் சொல்லி முடித்தார் சாத்தனார்.

இவற்றையெல்லாம் கேட்ட இளங்கோவடிகள் நெடுநேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அவர் தம் அகக்கண்ணில் இந்த வரலாற்றுக் காட்சிகளையெல்லாம் ஒரு முறை வரிசையாகக் கொண்டுவந்து கண்டார்போல் இருந்தது. பின்பு மெல்லச் சாத்தனாரைப் பார்த்து, "பாவம்! பாண்டிய மன்னனுடைய முடிவு வருந்தத் தக்கது. அவன் செய்த பிழைக்கு வேறு யாரும் தண்டனை கொடுக்கவில்லை. தானே தன் உயிரை மாய்த்துக் கொண்டான். தான் செய்தது அறமன்று என்பதை உணர்ந்தவுடன் அவன் உயிர் பிரிந்தது. அந்த அறமே அவனுக்குக் கூற்றாக நின்று ஒறுத்துவிட்டது. அரசியலில் ஈடுபட்டவர்கள்

உணரவேண்டிய உண்மை இது. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்ருகும் என்ற அரிய உண்மையைப் பாண்டிய மன்னன் தன் உயிரைக் கொடுத்து நிலைநாட்டி விட்டான்'' என்ருர்.

"ஆம், அது பெரிய உண்மைதான். அரசர் குடியில் பிறந்தமையால் தங்களுக்கு இந்த வரலாற்றிலிருந்து இந்த உண்மை முதலில் புலப்பட்டது.''

"வேறு பல கருத்துக்களும் தோன்றின. இந்தக் குறவர்கள் தாங்கள் கண்ட அற்புதக் காட்சியைச் சொன்னுர்களே; அதிலிருந்துதானே இத்தனை நிகழ்ச்சிகளையும் நான் அறிந்துகொள்ள வழி பிறந்தது? அந்தப் பத்தினித் தெய்வத்தின் பெருமையை நாம் மறக்க முடியுமா?''

"சேர அரசர் பிரான் கண்ணகிக்குக் கோயில் கட்ட எண்ணியிருக்கிருர். இமயத்திலிருந்து விக்கிரகம் செய்யக் கல் எடுத்து வரப்போகிருர்'' என்று இடையே சாத்தனுர் சொன்னுர்.

"அப்படியா? அது மிகவும் போற்றத்தக்க செயல். இனி நாள் ஆக ஆக அந்த வீரபத்தினியை யாவரும் போற்றுவார்கள். புகழ் மிக்க பத்தினியை உயர்ந்தவர்கள் ஏத்திப் பாராட்டுவார்கள் என்பதும் ஒரு பெரிய உண்மை. அதனையும் கண்ணகியின் வரலாற்ருல் உணரலாம். கடைசியில் நீங்கள் சொன்ன சங்கமன் கதை மனத்தை உருக்குகிறது. எல்லாம் வினையின் விளைவு என்பது எவ்வளவு தெளிவாகத் தெரிகிறது! முன் செய்த வினை அடுத்த பிறப்பில் வந்து எப்படியாவது இன்ப துன்பங்

களை ஊட்டிவிடும் என்பது அசைக்க முடியாத உண்மை.''

'' நான் சொன்ன நிகழ்ச்சிகளில் மூன்று பெரிய உண்மைகளை யல்லவா கண்டுவிட்டீர்கள்? உங்களுடைய அறிவு, உலகுக்குப் பொதுவான உண்மைகளைக் காணுவதில் நாட்டமுடையதாக இருக்கிறது.''

'' ஆம்; இத்தனை நேரம் அந்த மூன்று உண்மைகளையும் சிந்தித்துக்கொண்டே இருந்தேன். நினைக்க நினைக்க வியப்பாயிருக்கிறது. அதோடு மற்றோர் எண்ணமும் தோன்றுகிறது.''

'' என்ன? சொல்ல வேண்டும்.''

'' இந்த மூன்று கருத்துக்களை அடிப்படையாக வைத்து இந்தக் கதையைக் காவியமாக இயற்றலாம் என்று தோன்றுகிறது. எல்லாவற்றிற்கும் சிலம்பு காரணமாக இருக்கிறது. ஆதலின் சிலப்பதிகாரம் என்ற பெயரை வைத்துக் கண்ணகியின் கதையை விரிவாக நாம் பாடலாம் என்ற எண்ணம் எழுகிறது. உங்கள் கருத்து என்ன?''

'' நன்றாகச் செய்யலாம். முடியுடை வேந்தராகிய மூன்று பேர்களும் இந்தக் கதையில் வருகிறார்கள். கண்ணகி பிறந்த சோழ நாடும், அவள் கணவனை இழந்த பாண்டி நாடும், தெய்வம்ஆன சேர நாடும் கதைக்கு இடமாக இருக்கின்றன. மூன்று அரசர்களுக்கும் உரிய இதனைத் தாங்களே அருளிச் செய்யலாம்'' என்றார் சாத்தனார்.

சாத்தனாருக்கு அந்தக் காவியத்தைத் தாமே இயற்றவேண்டும் என்ற அவா உண்டாயிற்று.

ஆனாலும் அந்தக் கருத்தை முதலில் வெளியிட அவர் விரும்பவில்லை. 'இளங்கோவடிகளையே இயற்றும்படி மரியாதைக்குச் சொல்லலாம். இவர் சேர குலத்தில் பிறந்தவர். ஆதலின் மற்ற மன்னர்களைப் பற்றிச் சொல்ல இவர் விரும்பமாட்டார். நம்மையே இயற்றச் சொல்லி விடுவார்' என்று எண்ணியே அப்படிச் சொன்னார்.

இளங்கோவடிகளோ, "பார்க்கிறேன். இந்த வரலாறு என் உள்ளத்தை உணர்ச்சி வசமாக்கிவிட்டது. பல அரிய கருத்துக்களை உடையது இந்தக் கதை என்பதை உணர்கிறேன். நன்றாகச் சிந்தித்து எழுதி முடித்துவிடலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இறைவன் திருவருள் கூட்டுவிக்கும் என்றே எண்ணுகிறேன்" என்று சொன்னார். அது கேட்ட சாத்தனாருக்கு ஏமாற்றம் உண்டாகிவிட்டது. ஆனாலும் அதை வெளிக் காட்டிக்கொள்ளலாமா? "நன்றாகச் செய்து முடியுங்கள்" என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டார்.

# 7. சேர மன்னன் புறப்பாடு

செங்குட்டுவன் அரியணையில் வீற்றிருந்தான். இமயமலை சென்று கண்ணகியின் விக்கிரகம் செய்யக் கல்லைக் கொணர வேண்டும் என்று அவன் கருதியதை நிறைவேற்றும் வழி யாது என்பதை, யோசிக்கவே மந்திரிகளும் பிறரும் கூடியிருந்தார்கள். சேரனுடைய குலகுரு ஓர் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். நாள் நட்சத்திரம் பார்த்துச் சொல்லும் பெருங்கணியாகிய சோதிடரும் ஓரிடத்தில் இருந்தார். அமைச்சர்கள் தம் தம் இருக்கையில் இருந்தார்கள். படைத்தலைவர்களும் இந்த ஆலோசனையில் கலந்து கொள்ள வந்திருந்தார்கள். யாவரும், "மன்னர்பிரான் வாழ்க! வெல்க!" என்று சொல்லியபடி வந்து அமர்ந்தார்கள்.

அந்த அவையினரை நோக்கிச் செங்குட்டுவன் பேசலானான்; "வடநாட்டுக்குச் சென்று இமயத்தை அடைந்து கல் கொணர்ந்து பத்தினித் தெய்வத்தின் திருவுருவை அமைத்து வழிபட வேண்டும் என்னும் ஆவல் நாளுக்கு நாள் என்னிடம் வளர்ந்து வருகிறது. இமயக் கல்லைக் கொணர வேண்டும் என்று நான் கருதுவதற்குச் சிறப்பான காரணம் ஒன்று உண்டு. சில நாட்களுக்கு முன் இமயத்திலிருந்து சில தவ முனிவர்கள் இங்கே வந்தார்கள். அவர்களை உபசரித்து வழிபட்டேன். தமிழ் நாடு முழுவதும் பார்த்த அவர்கள் வஞ்சிமா நகருக்கு வந்து சில நாள் தங்கினார்கள். அவர்களிடம் தமிழ் நாடு எப்படி இருக்கிறது என்று கேட்டேன். அவர்கள் இந்த நாட்டை மிகப்

பாராட்டினார்கள். இங்குள்ள மக்களின் பண்பு சிறப்பாக இருப்பதைப் போற்றினார்கள். வீரர்கள் பலர் இருப்பதை அறிந்து வியந்தார்கள். நம் படைகளையும் கண்டு, 'எல்லா வகையிலும் நிறைந்த அரசு இது' என்று சொன்னார்கள். 'இப்படி வீரத்திலும் பண்பிலும் சிறந்துள்ள தமிழ் நாட்டு மன்னர்களின் பெருமையை வடக்கே உள்ள சிலர் உணர்வதில்லை. அந்தப் பேதைமையை அவர்கள் பேசும் பேச்சு வெளிப்படுத்துகிறது' என்றார்கள். 'எதைக்கொண்டு இப்படிச் சொல்கிறீர்கள்?' என்று கேட்டேன்.

"வடக்கே ஒரு நாட்டில் ஒரு பெரிய திருமணம் நிகழ்ந்ததாம். அதற்கு வடநாட்டு மன்னர்கள் பலரும் வந்திருந்தார்களாம். அப்போது ஒரு மன்னன், 'தமிழ் நாட்டிலுள்ள சேர சோழ பாண்டியர்கள் தங்களுடைய அடையாளங்களாகிய வில்லையும் புலியையும் மீனையும் இமயமலையிலே பொறித்திருக்கிறார்களாம். இமயம் வரையிலும் தங்கள் வீரப் புகழ் பரவியிருக்கிறதென்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்' என்று சொன்னான். அதைக் கேட்டு அங்கே இருந்த கனகன், விசயன் என்ற இரண்டு வேந்தர்கள் எள்ளி நகையாடினார்களாம்; 'அந்த மன்னர்கள் இங்கே வந்தபோது எங்களைப் போன்ற மன்னர்கள் இங்கே இல்லை போலும்! இருந்தால் அப்படிச் செய்ய விட்டிருப்போமா?' என்று கேட்டார்களாம். இந்தச் செய்தியை இமயத்திலிருந்து வந்தவர்கள் சொன்னார்கள்.

"தமிழ்நாட்டு மன்னர்களின் பெருமையைக் குறைத்துப் பேசிய அந்த இருவரும் நம் வீரத்தை உணர வேண்டாமா? அதற்கும் இந்த யாத்திரை உதவியாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

கடவுள் உரு அமைப்பதற்காக இமயம் சென்று கல்லை யெடுத்து, எந்த மன்னர்கள் நம்மை இகழ்ந்தார்களோ அவர்கள் தலையிலே அந்தக் கல்லை வைத்து நான் கொண்டு வராவிட்டால், குடிமக்களைத் துன்புறுத்தும் கொடுங்கோலன் என்ற பழியைப் பெறுவேனாக!'' என்று கோபத்துடன் சபதம் செய்து தன் பேச்சை முடித்தான் செங்குட்டுவன்.

அருகில் இருந்த குலகுரு அவனைக் கையமர்த்தி, ''உன்னுடைய உறுதி மொழிக்கு முன்னே நிற்கும் மன்னரும் இருக்கின்றனரா? அந்தப் பேதையர்கள் அறியாமையால் ஏதோ சொல்லியிருக்கிறார்கள். உன்னை இகழ்ந்ததாகக் கொள்ளக் கூடாது. நீ கோபம் ஆறுவாயாக!'' என்று சமாதானப்படுத்தினார்.

அப்போது அங்கே இருந்த பெருங்கணி எழுந்து, ''மன்னர் பெருமானே! இன்று வெற்றிக்கு ஏற்ற நாளாக இருக்கிறது. இன்றே புறப்பட்டால் அரச ரெல்லாம் மன்னர்பிரானின் திருவடியைப் பணிந்து ஏவல் கேட்பார்கள். ஆகவே இன்றே பயணத் தைத் தொடங்குவது நல்லது'' என்றான்.

அதைக் கேட்டவுடனே, ''இந்த முகூர்த்தத்தில் நம்முடைய வாளையும் குடையையும் வடக்கு நோக்கி எடுத்துச் செல்லுங்கள். வடதிசைப் பயணத்தைத் தொடங்கிவிடுவோம்'' என்று அரசன் உத்தர விட்டான்.

அரசன் படையுடன் வடநாட்டுக்குப் புறப்படு கிறான் என்ற செய்தியை முரசறைந்து தெரிவித்தனர். வீரர்கள் ஊக்கத்தோடு ஆரவாரம் செய்தார்கள். படைகளின் கூட்டத்தோடு பல வகை அதிகாரிகளும்

சேர்ந்துகொண்டு பயண முகூர்த்தத்தை நடத்தலானார்கள். ஐம்பெருங்குழு எண்பேராயம் என்னும் கூட்டத்தினரும், அரச கருமம் செய்யும் அதிகாரிகளும், கணக்குத் தொழில் புரிவோரும், அறங்காவல் செய்யும் பகுதியினரும், படையைச் சார்ந்த தலைவர்களும் சேர்ந்து, "அரசர் பெருமான் வாழ்க!" என்று வாழ்த்தினார்கள். பட்டத்து யானையின்மேல் அரசனது வாளையும் வெண்குடையையும் ஏற்றி, ஊருக்கு வெளியிலுள்ள மதிற்புறத்தே வடதிசையிலே போகச் செய்து நிறுத்தினார்கள்.

போர் செய்யப் புகும் அரசர்கள் பகைமன்னர் நாட்டை நோக்கிப் புறப்படுகையில் வஞ்சிமாலை சூடுவது தமிழ் நாட்டு வழக்கம். சேரன் செங்குட்டுவன் படை வீரர்களையெல்லாம் அழைத்து யாவருக்கும் ஒருங்கே உணவு அளித்துத் தன் குலத்துக்குரிய பனை மாலையோடு வஞ்சி மாலையையும் தலையிற் சூட்டிக் கொண்டான்.

அரண்மனை வாயிலில் முரசு முழங்கியது. செங்குட்டுவன் சிவபக்தன். ஆதலின் சிவபிரானுடைய கோயிலுக்குச் சென்று வணங்கிப் பிரசாதம் பெற்றுத் தலையில் அணிந்துகொண்டு யானையின்மேல் ஏறினான். அப்போது திருமால் கோயிலிலிருந்து பிரசாதம் வந்தது. "வேந்தன் வெற்றி பெறுக!" என்று வாழ்த்தி அதை அரசனிடம் வழங்கினார்கள். சிவபெருமானுடைய நிர்மாலியப் பிரசாதத்தைத் தன் தலையில் அணிந்திருந்தமையால், திருமாலின் பிரசாத மாலையை வாங்கித் தன் தோளில் அவன் அணிந்துகொண்டான். யானை புறப்பட்டது. அங்கங்கே

அரங்குகளில் இருந்த நாடக மடந்தையர் புறத்தே வந்து அரசனைக் கும்பிட்டு, "அரசர் பெருமான் வெற்றி மாலையோடு திரும்பட்டும்!" என்று வாழ்த்தினார்கள். அரசவையில் ஆசனத்தில் அமர்ந்து அரசனை ஏத்துவோர் சிலர் உண்டு; அவர்களுக்கு மாகதர் என்று பெயர். அவர்களை விடச் சற்றே பதவியிற் குறைந்தவர்கள் சூதர்; அவர்கள் நின்ற படியே மன்னனைப் புகழவேண்டும். தாளம் கொட்டி மன்னன் புகழைப் பாடுவோர் சிலர் உண்டு; அவர்களுக்கு வைதாளிகர் என்று பெயர். இவர்கள் யாவரும், "மன்னர்பிரான் வெற்றி பெறுக! வாழ்க!" என்று வாழ்த்தினார்கள்.

யானை வீரர்கள் ஒருபால் வாழ்த்தினார்கள்; குதிரை வீரர்கள் ஒருபுறம் நின்று வாழ்த்துக்கூறினார்கள்; வாளேந்திய வீரர்களும் மகிழ்ச்சி பொங்க வாழ்த்தினார்கள். எங்கும் ஒரே உற்சாகம்! இத்தகைய கோலாகலத்துடன் சேரன் செங்குட்டுவன் தன் பரிவாரங்களுடனும் படைகளுடனும் வஞ்சிமாநகரை விட்டுப் புறப்பட்டான்.

கடற்கரையின் வழியே வடக்கே சென்ற படை அப்பால் மேலும் சென்று நீலகிரியின் அடிவாரத்தை அடைந்தது. அங்கே பாடிவீடு அமைத்து மன்னனும் பிறரும் தங்கினர். அவன் அங்கே தங்கியிருத்தலை அறிந்து பலர் அவனைப் பார்க்க வந்தனர். இமயத்திலிருந்து பொதியமலைக்குச் செல்லும் முனிவர் சிலர் செங்குட்டுவன் இருந்த கூடாரத்தை அடைந்து அவனைக் கண்டனர். மன்னவன் அவர்களை வணங்கினான். அவர்கள் செங்குட்டுவனை நோக்கி, "அரசே,

செஞ்சடைவானவனுகிய சிவபெருமானுடைய திருவருளால் பிறந்தவன் நீ. உன் குணங்களைப் பிறர் சொல்லக் கேட்டிருக்கிறேம். ஆதலின் உன்னைப் பார்த்துப் போகலாம் என்று வந்தோம்'' என்றனர்.

''உங்களுக்கு என்னுல் ஆகவேண்டியது ஏதேனும் உண்டானுல் சொல்லுங்கள்; அதனை நிறைவேற்றுகிறேன்'' என்ருன் அரசன்.

''நீ இமயத்துக்குப் போகிருய் என்று கேள்வியுற்றேம். நீ செல்லும் காரியம் இறைவன் அருளால் நிறைவேறுவதாக! இமயத்தில் அருமறை அந்தணர் பலர் வாழ்கின்றனர். அவர்களுக்குத் துன்பம் நேராமல் பாதுகாப்பது உன் கடமை. இது ஒன்றுதான் நாங்கள் வேண்டுவது'' என்று சொல்லி விடை பெற்றுச் சென்ருர்கள்.

அப்பால் மன்னனைக் காண்பதற்காகக் கொங்கணத்திலிருந்து கூத்தர்கள் வந்தார்கள். கருநட நாட்டிலிருந்தும் பலர் வந்தனர். குடகு நாட்டிலிருந்து ஆடல் பாடலில் வல்ல மகளிரோடு குடகர் வந்தனர். இப்படி வேறு பலரும் வந்து, ''நாங்கள் கூத்திலே சிறந்தவர்கள்'' என்றும், ''நாங்கள் இசையில் வல்லவர்கள்'' என்றும், ''நாங்கள் பலவகை இசைக்கருவிகளை வாசிப்பவர்கள்'' என்றும் தங்கள் தங்கள் திறமையை எடுத்துச் சொன்னுர்கள். அவர்களுடைய தகுதிக்கேற்றபடி அரசன் பலவகை அணிகலன்களும் ஆடைகளும் வழங்கினுன். இவ்வாறு, வருபவர்களைக் கண்டும் அவர்களுக்குப் பரிசில்களை அளித்தும் செங்குட்டுவன் அந்தப் பாடி வீட்டில் தங்கியிருந்தான்.

# 8. இமயத்துச் சிலை

பாடிவீட்டில் செங்குட்டுவன் தங்கியிருந்தபோது அவனைப் பார்ப்பதற்கு வடநாட்டிலிருந்து ஒரு பெரிய கூட்டம் வந்தது. அந்தக் கூட்டத்தில் நடனமாடும் மகளிர் நூற்றுநான்கு பேர் இருந்தனர். இசைக் கருவிகளை வாசிப்பவர் இருநூற்றெட்டுப்பேர், விகடம் பண்ணுகிறவர்கள் நூறுபேர் வந்தார்கள். தேர்கள் நூறு வந்தன; யானை ஐந்நூறும், குதிரைகள் பதினாயிரமும் வந்தன. வடநாட்டில் கிடைக்கும் பலவகைப் பண்டங்களை ஏற்றிக்கொண்டு இருபதினாயிரம் வண்டிகள் வந்தன. சட்டையும் தலைப்பாகையுமுடைய பிரதானிகள் ஆயிரம் பேர் இந்தக் கூட்டத்துடன் வந்தனர். அவர்களைக் காஞ்சுகிகள் என்பார்கள்; சட்டையிட்டவர்கள் என்பது அந்தச் சொல்லுக்குப் பொருள். அந்த ஆயிரம் பேர்களுக்கும் தலைமை தாங்கி வந்தவன் சஞ்சயன் என்பவன்.

அவர்கள் வந்திருப்பதை வாயிலோரால் அறிந்த செங்குட்டுவன் அவர்களை வருக என்று சொல்லி அழைக்கச் சொன்னான். அந்தக் கூட்டத்தின் தலைவனாகிய சஞ்சயன் உள்ளே வந்து அரசனை வணங்கினான். "நீங்கள் யார்?" என்று அரசன் கேட்க, "நாங்கள் நூற்றுவர் கன்னராகிய வடநாட்டு மன்னர் அனுப்ப வந்தவர்கள். அவர்கள் தங்களோடு சேர்ந்து கொண்டு என்ன உதவி வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறார்கள். தாங்கள் இமயத்துக்கு யாத்திரையாகப் புறப்பட்டதை அறிந்து எங்களை அனுப்பினார்கள். அதோடு ஒரு விண்ணப்பமும் செய்து கொள்ளும்படி

பணித்தார்கள்'' என்று சொல்லி நிறுத்திஞன் சஞ்சயன்.

''என்ன விண்ணப்பம்? அஞ்சாமல் தெளிவாகச் சொல்லுங்கள்'' என்று சேரன் ஏவிஞன்.

''தாங்கள் வடதிசைக்குச் செல்வது, இமயத்தில் கடவுட்சிலே வடிக்க ஒரு கல்லே எடுத்துக் கொணர்வ தற்காக என்ருல், தங்களுக்கு இந்தத் தொல்லே வேண் டாமே என்று தெரிவிக்கச் சொன்ஞர்கள். 'நாங்களே இமயம் சென்று ஒரு கல்லே உரிய முறையில் எடுத்துக் கொணர்ந்து, சிலே வடித்துக் கங்கையில் நீர்ப்படை செய்து கொடுப்போம். அது எங்களால் முடியும் காரியம்' என்று தங்களிடம் பணிந்து சொல்லச் சொன் ஞர்கள். திருவுள்ளக் குறிப்பு எப்படியோ அறியேன்'' என்று சஞ்சயன் கூறி முடித்தான்.

செங்குட்டுவன் புன்னகை பூத்தான்; ''எனக்குத் தோழர்களாக இருந்து துணேபுரிவதாகச் சொன்ன தற்கு நன்றி பாராட்டுகிறேன். ஆஞல் நான் இந்த வடநாட்டுப் படையெடுப்பை மேற்கொண்டதற்கு இமயத்திலிருந்து கல்லேக்கொண்டு வருவது மட்டும் காரணம் அன்று. வடநாட்டில் உள்ள பாலகுமரன் என்ற வேந்தனுக்குப் புதல்வர்களாகிய கனகன், விசயன் என்ற இருவர் வாய்த்துடுக்கு மிக்கவர்களாம். ஒரு கல்யாணத்தில் ஏதோ பேசிஞர்களாம். தமிழ் நாட்டு மன்னர்களின் ஆற்றலே அறியாமல் ஏதோ உளறிஞர்களாம். அவர்களுக்கு அறிவு புகட்டவே இந்தச் சேனேயோடு புறப்பட்டேன்'' என்ருன்.

அதைக்கேட்ட சஞ்சயன், "எங்களை அனுப்பிய மன்னர்களுக்கு ஏதேனும் சொல்ல வேண்டுமானுல் பணியுங்கள்; போய்ச் சொல்கிறேன்" என்ருன்.

"இமயத்துக்குப் போவதற்கிடையிலே கங்கை யாற்றைக் கடக்க வேண்டியிருக்கும். ஆதலின், இந்தப் படை முழுவதும் ஏறி ஆற்றைக் கடப்பதற்கு ஏற்ற வகையில் கப்பல்களை வைத்திருக்கும்படி நூற்றுவர் கன்னரிடம் சொல்லுங்கள்" என்று அரசன் கூறச் சஞ்சயன், அப்படியே சொல்வதாகச் சொல்லி விடை பெற்றுக்கொண்டான். அவனுடன் வந்த காஞ்சுகி மக்களும் தாங்கள் கொண்டுவந்த கையுறை களையும், வண்டிகளில் வந்த பண்டங்களையும் அரச னிடம் சேர்ப்பித்து விட்டுப் போனுர்கள்.

அப்பால் செங்குட்டுவன் தான் தங்கியிருந்த பாடியை விட்டு வடக்கு நோக்கிப் படைகளுடன் புறப் பட்டுச் சென்ருன். போகும்போது அங்கங்கே உள்ள வர்கள் அந்தப் படையினருக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்தனர். படை கங்கைக்கரையை அணுகியது. அங்கே நூற்றுவர் கன்னர் இந்தப் படையின் பொருட்டு வைத்திருந்த கப்பல்களில் யாவரும் ஏறிக் கங்கையாற்றைக் கடந்தனர். "இவ்வளவு பெரும் படையும் கடப்பதற்கு ஏற்றபடி மரக்கலங்களும் கப்பல் களும் சித்தமாக வைத்திருந்தது, இந்த மன்னர்களின் அன்பைப் புலப்படுத்துகிறது" என்று செங்குட்டுவன் மனம் மகிழ்ந்தான்.

படை வடகரையை அடைந்தவுடன் அங்கே காத் திருந்த நூற்றுவர் கன்னராகிய வேந்தர்கள் சேரனை

வரவேற்றார்கள். படைகளுக்கு வேண்டிய உணவு முதலியவற்றை உதவினார்கள். அவர்களுடைய நாட்டையும் சேரன் படை கடந்து சென்றது. தங்கள் நாட்டின் எல்லைவரையிலும் கன்னர்கள் செங்குட்டுவ னுடன் இருந்து வழியனுப்பி வைத்தார்கள். அப்பால் பாலகுமரனென்னும் வேந்தனுக்குரிய நாடு இருந்தது. அதன் எல்லையில் படைகள் பாசறை இறங்கின.

அதனை அறிந்த பாலகுமரன் மக்களாகிய கனகனும் விசயனும் சினந்து எழுந்தார்கள். "நாங்கள் அன்று ஒரு திருமணத்தில் சொன்ன வார்த்தை பலித்துவிட்டது. எங்கள் தோள்வலியை உலகுக்குக் காட்டும் சந்தர்ப்பம் வந்திருக்கிறது. தென்னாட்டிலிருந்து வந்த வேந்தனை எளிதில் வென்று வாகை சூடுவோம்" என்று வஞ்சினம் கூறினார்கள்.

வந்திருக்கும் படை எளியதன்று, பெரிய படை என்று அவர்கள் கேள்வியுற்றார்கள். அன்றியும், தமிழ் நாட்டு வீரர்கள் மிக்க விறல் உடையவர்கள் என்பதை யும் ஒற்றர் மூலம் அவர்கள் அறிந்திருந்தார்கள். கங்கைக்கரை நாட்டுக் கன்னர்களும் வேறுமன்னர்களும் சேரமன்னனுக்குத் தோழர்களாக இருப்பதும் அவர் களுக்குத் தெரியவந்தது. துணையாக வேறு மன்னர் களை நாமும் சேர்த்துக்கொண்டால்தான் வெற்றிபெற முடியும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆகவே துணை சேர்க்கலானார்கள். அவர்களுடைய நாட்டைச் சூழ இருந்த நாட்டுச் சிறு மன்னர் பலர் அவர்களுடன் சேர்ந்தனர். உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன் என்ற பெயருடைய மன்னர்கள் துணையாக

வந்தார்கள். சித்திரன், சிங்கன், தனுர்த்தரன், சிவேதன் என்ற பெயருடைய சிலரும் கூடினர். வேறு சில மன்னர்களும் கனகவிசயர்களோடு சேர்ந்தார்கள். யாவரும் சேர்ந்துகொண்டு, "தமிழ் நாட்டு வீரர்களின் ஆற்றலை ஒருகை பார்த்துவிடுவோம்" என்று படைகளுடன் பாசறை இறங்கியிருந்த சேரனை எதிர்த்தனர். போர் மூண்டது.

இரு பக்கத்து வீரர்களும் பேராற்றலுடன் போர் புரிந்தார்கள். முரசுகள் அதிர்ந்தன. பறைகள் முழங்கின. சங்குகள் ஒலித்தன. ஊது கொம்புகளின் ஓசை எழுந்தது. தாளங்களைக் கொட்டினார்கள். யானையும் யானையும் மோதின. குதிரை வீரரும் குதிரை வீரரும் முட்டினர். தேரில் வரும் வீரர்கள் தேர் வீரர்களின்மேல் அம்பை எய்தனர். வாளெடுத்த வீரர் வாள் வீரரோடு மலைந்தனர். வில் எடுத்தவர் வில் எடுத்தவரோடு பொருதனர். வெறுங்கையுடன் மற்போரிட்டனர் சிலர்.

எங்கும் புழுதி எழுந்தது; யானைக்குக் கட்டிய மணியில் புகுந்து அதை ஒலிக்கவிடாமல் செய்தது; சங்குக்குள் புகுந்து அதை ஊதினால் ஒலி எழாமல் செய்தது.

பலருடைய கைகள் வெட்டுப்பட்டன. தலைகள் உருண்டன. தலைகளை இழந்த முண்டங்கள் குவியல் குவியலாகக் கிடந்தன. சில குறையுடம்புகள் குதித்தன. இரத்தம் வெள்ளமாக ஓடியது.

சேரன் படையிலிருந்த வீரர்கள் வடநாட்டரசர் படையைக் குலைத்து வீழ்த்தினார்கள். கொன்று களத்திற் குவித்தார்கள். தேர்கள் முறிந்து வீழ்ந்தன.

குதிரைகள் முகம் கவிழ்ந்து நிலத்தைக் கவ்வின. யானைகள் துதிக்கையை எடுத்து இடியைப் போலப் பிளிறிக்கொண்டு வீழ்ந்தன.

கனகவிசயர் தோல்வியுற்றுர்கள். செங்குட்டுவன் அவர்களைச் சிறைப்படுத்தச் செய்தான். அவர்களோடு ஐம்பத்திரண்டு தேர் வீரர்கள் சிறைப்பட்டனர். மற்ற வர்களில் உயிர்பிழைத்தவர்கள் ஆளுக்கு ஒருபுறமாக ஓட்டமெடுத்தனர். சிலர் துறவிகளைப்போல வேடம் பூண்டு போயினர். சிலர் சாம்பரைப் பூசிக்கொண்டு ஓடினர். சிலர் பாடுகிற பாணர்களைப்போலக் கோலம் புனைந்து தப்பிச் சென்றனர். சிலர் வாத்தியங்களைத் தோளில் மாட்டிக்கொண்டு ஓடினர். வேறு சிலர் கூத்தரைப்போல வேடம் அணிந்து சென்றுர்கள். பாணர் முதலியவர்களைக் கொல்லுவது தகாது என்பது அக்காலத்தினர் கொள்கை. அதனுல் அவர்கள் அத்தகையவர்களைப்போல உரு மாறி, பெற்றேம் பிழைத்தோம் என்று ஓடிவிட்டார்கள்.

வெற்றிபெற்ற செங்குட்டுவன் தன் பாசறையில் அமர்ந்து அமைச்சர்களையும் படைத் தலைவர்களையும் கூட்டி, மேலே செய்வதற்குரிய செயல்களைப்பற்றி ஆராய்ந்தான். "நாம் இனி யாதொரு தடையும் இன்றி இமயமலைக்குச் செல்லலாம். இங்கே நம்மைத் தடுத்து நிறுத்துவதற்கு வந்த மன்னர்கள் யாவரும் தோல்வியுற்றனர். ஆதலின் விரைவில் இமயம் செல்ல வேண்டியதுதான்" என்று சேரமான் தன் கருத்தைச் சொன்னுன்.

அமைச்சன் ஒருவன், "மன்னர் பிரான் வர வேண்டுமென்பது இல்லையே! நாங்களே சென்று

கல்லை எடுத்து வந்துவிடலாம். தடையும் படையும் இருந்தால்தானே போர் எழும்? இப்போது அப்படி ஒன்றும் இல்லை. ஆதலின் அரசர் பெருமான் இங்கே இருந்து இளைப்பாறட்டும். எங்களுடன் ஒரு சிறு படை வந்தால் போதும்'' என்றான்.

அரசன் இந்த யோசனைக்கு இசைந்தான். ஆனால் பெரிய படை ஒன்று செல்லவேண்டும் என்று விரும்பினான். "ஒருகால் திடீரென்று யாரேனும் எதிர்த்தால் நாம் ஏமாந்துபோகக் கூடாதல்லவா?'' என்று கேட்டான்.

கடைசியில் அமைச்சரில் ஒருவனாகிய வில்லவன் கோதையைத் தலைவனாகக் கொண்டு பல படை வீரர்கள் இமயமலையை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் புறப்படும்போது அரசனுக்கு, நீலகிரிக்கு அருகில் பாடி இறங்கியிருந்தபோது இமயத்திலிருந்து வந்த தவமுனிவர் சொன்னது நினைவுக்கு வந்தது. "இமயப் பகுதியில் வேதம் பாடும் அந்தணர் இருப்பார்கள். எப் போதும் அவியாதவாறு எரி ஓம்புவார்கள். அத்தகையவர்களிடம் பணிவாக நடந்து அவர்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்'' என்று வீரர்களிடம் சொல்லியனுப்பினான்.

அவர்கள் இமய மலையை அடைந்து ஓரிடத்தில் பெரிய உருவத்தை வடிக்கும் அளவுக்குக் கல்லை வெட்டி எடுத்தார்கள். அதை எடுத்து அரசன் இருக்கும் இடத்துக்குக் கொண்டுவந்தார்கள். நல்ல நாள் பார்த்து அதை விக்கிரகமாகச் செதுக்கும் வேலையைத் தொடங்கினார்கள். பத்தினிக் கடவுளின் வடிவம் சிற்பியின் உளியில் உருவாகி வந்தது.

# 9. கங்கைக் கரையில்

வடபேரிமயத்திலிருந்து கொண்டுவந்த கல்லில் பத்தினித் தெய்வத்தின் திருவுருவத்தைச் சிற்பிகள் அமைத்துவிட்டார்கள். கோயிலில் தெய்வப் படிமங்களை நிறுவுவதற்கு முன் அவற்றைப் புனித நீரில் சிலகாலம் கிடத்திவைப்பது ஒரு வழக்கம். இமயக் கல்லில் உருவாகிய கண்ணகியின் படிமத்தைக் கங்கையில் நீர்ப்படை செய்ய வேண்டும் என்று முன்பே அரசன் தீர்மானித்திருந்தான். சிறைப்பட்டிருந்த கனக விசயர்களின் தலையில் அந்தச் சிலையை ஏற்றிக் கங்கைக் கரைக்குச் சுமந்து வரும்படி பணித்தான். அரசனும் கங்கைக் கரையை அடைந்து செய்ய வேண்டிய முறைப்படி சிலையை அவ்வாற்றில் நீர்ப்படை செய்தான்.

சில நாட்கள் சிலை நீரிலே இருக்கவேண்டு மாதலின் செங்குட்டுவனும் தன் படைகளுடன் அங்கே தங்கும்படி நேர்ந்தது. வடநாட்டில் இருந்த ஆரிய மன்னர்கள் கங்கையின் தென்கரையில் பெரிய பாடி வீட்டை அமைத்துத் தந்தார்கள்.

சில காலம் தங்குவதற்கு அமைத்ததுபோல அது தோன்றவில்லை. பேரரசனாகிய சேர மன்னனுக்கு ஏற்ற வகையில் விரிவாகவும் சிறப்பாகவும் அதைச் சமைத்தார்கள். அரசன் தங்குவதற்காக நடுவே அரண்மனையைப் போன்று தோற்றமளிக்கும் இடம் ஒன்றை எழுப்பினார்கள். மணிமண்டபங்களைக் கட்டினார்கள். பொன்னால் அலங்கரிக்கப் பெற்ற அரங்குகளை உண்டாக்கினார்கள். பூம்பந்தர் தோன்றியது. பூஞ்

சோலேயும் பொய்கையும் அமைத்தார்கள். இப்படிப் பல வகையிலும் அழகும் சிறப்பும் கொண்ட சிறிய நகரமாக அவ்விடத்தை ஆரிய மன்னர் சமைத்து விட்டார்கள். அந்தப் பாடியில் செங்குட்டுவன் தன் படைகளுடன் புகுந்தான்.

அங்கே சபை கூட்டிப் போரில் வீரம் பொலியப் போர் புரிந்த வீரர்களைப் பாராட்டிப் பரிசளிக்க எண்ணினன். அமைச்சரும் படைத்தலைவரும் வந்தனர். வீரர்கள் குழுமினர்கள். அரசன் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருந்தான். முதலில் போரில் வீரத்துடன் பொருது உயிரை இழந்தவர்களுக்குச் சிறப்புச் செய்யத் தொடங்கினன். அவர்களுடைய மைந்தர்களை அழைத்து அவர்களுக்குப் பரிசு தருவதன் மூலமாக இறந்தவர்களுக்கு நன்றியறிவு காட்டலாம் என்பது அரசன் எண்ணம். ஆகவே அத்தகையவர்களை முதலில் அழைத்தான்.

போரில் இறந்து வீரசொர்க்கம் புகுந்தவர்களின் மைந்தர் வந்தனர்; தலையும் தோளும் துண்டிக்கப் பெற்று மடிந்தவர்களின் பிள்ளைகள் வந்தார்கள்; வாட்போர் செய்து மடிந்தவர் மக்களும், உறவினர் மடியத் தாமும் மடிந்தவர்களின் கான்முளைகளும் வந்தனர். அவர்களுக்கு வெற்றிச் சின்னமாகிய பொன்னாலாகிய வாகைப் பூவை அணியச் செய்தான் அரசன்.

பிறகு போரில் வீரங்காட்டி வெற்றி கொண்டவரை அழைத்தான். வாட்போரில் பகைவர்களை வீழ்த்திய மறவர் பரிசு பெற்றனர். தேர்வீரர்களோடு செய்த போரில் அவர்கள் தேரையும் அவர்களையும்

வீழச் செய்த வீரர் பொன்வாகை பெற்றனர். பகைவ ரின் தலையை அரிந்து நிலத்தில் விழச் செய்தவர், தம் மார்பிலே புண் பெற்றுப் பகைவர்களின் முதுகு கண்ட வீரர் ஆகியவர் வந்து வாகைப்பூப் பெற்றனர்.

இவ்வாறு சிறப்புச் செய்து முடிப்பதற்கு நெடு நேரமாகி விட்டது. தனக்குக் கிடைத்த வெற்றியினால் உண்டான பெருமிதத்தோடும், வீரர்களுக்குச் சிறப்புச் செய்த மன நிறைவோடும் சேரமான் வீற்றிருந்தான். "அயல் நாட்டுக்கு வந்து போர் செய்து வெற்றி பெற் றது மிகவும் அரிய செயல். இந்த வீரர்கள் இல்லா விட்டால் இந்த வெற்றி கிடைக்க வழியே இல்லை. இந்த வெற்றி எனக்கு மட்டும் உரியது அன்று; எல்லா வீரர்களுக்கும் உரியது. ஒரு வகையில் பார்த் தால் தமிழ் நாட்டு மன்னர்களுக்கும் அவர்களுடைய குடிகளுக்கும் உரியது என்றே சொல்ல வேண்டும்" என்று பெரு மகிழ்ச்சியோடு அவன் பேசினான்.

அந்தச் சமயத்தில் அங்கே மாடலன் என்னும் அந்தணன் வந்தான். அவன் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன்; கோவலனுடைய நண்பன். "எம் கோ வாழ்க! மாதவி யென்னும் பெண் பாடிய கானல்வரிப் பாட்டானது கனக விசயர்களின் முடியணிந்திருந்த தலைகள் கல்லைச் சுமக்கும்படி செய்தது. வீரத்தால் நாடுகளை அடிப்படுத்தி ஆண்ட அரசே வாழ்க!" என்று அவன் அரசனை வாழ்த்தினான்.

"பகையரசர்களுக்குத் தெரியாத ஒன்றைச் சொன் னீர்களே; நீங்கள் சொன்னதற்கு என்ன பொருள்?" என்று கேட்டான் அரசன்.

"சொல்லுகிறேன். காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த கோவலன், மாதவி யென்னும் நாடகக்

கணிகையோடு இருந்த காலத்தில் ஒரு நாள் இருவரும் கடற்கரைக்குச் சென்றனர். அங்கே கூடாரம் அமைத்துத் தங்கினர். இருவரும் யாழ் வாசித்தார்கள். அப்போது ஒரு வரிப்பாட்டைப் பாடினாள் மாதவி. விதி வந்து விளையாடியமையால் அந்தப் பாட்டைக் கேட்ட கோவலன், அவள் தன்னைப் புறக்கணித்து விட்டதாக நினைத்தான். அதனால் அவளைப் பிரிந்து தன் மனைவியாகிய கண்ணகியிடம் வந்தான். பிறகு அவளுடன் மதுரை புகுந்து கொலையுண்டான். அவனுடைய பத்தினி மதுரையிலிருந்து நின் நாடு புகுந்து, இப்போது வட நாட்டு அரசர் மணிமுடியின்மேல் ஏறினாள்'' என்று சொல்லி விளக்கினான்.

''கோவலன் மனம் திறம்புவதற்கு மாதவி பாடிய கானல்வரிப் பாட்டுக் காரணமாக இருந்தது; மேலே நிகழ்ந்தன வெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நடக்க அதுவே மூல காரணமாயிற்று என்று சொல்லுகிறீர்களா?'' என்று கேட்டான் செங்குட்டுவன்.

''ஆம்; எத்தனை விளைவுகள் அடுக்கடுக்காக நிகழ்ந்துவிட்டன! எல்லாம் ஊழ்வினையால் ஆனவை'' என்று பெருமூச்சு விட்டான் மாடலன்.

''நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்?'' என்று செங்குட்டுவன் கேட்டான்.

''நான் பொதியில் மலையை வலம் கொண்டு சென்று குமரித் துறையில் ஆடிவிட்டு வருகிறேன். இப்போது கங்கை நீரில் ஆடுவதற்காக வந்தேன். மன்னர் பிரானைக் கண்டேன்'' என்றான் அவ் வந்தணன்.

"கங்கை நீரில் ஆடுவதற்குக் காரணம் ஏதாவது உண்டா? அன்றி, காரணமின்றியே ஆட வந்தீர்களா?''

"காரணம் உண்டு. கோவலன் இறந்த செய்தியைப் பலருக்குச் சொன்னேன். அது கேட்டுத் துயரம் தாங்காமல் சிலர் இறந்தார்கள். அவர்கள் அப்படி இறப்பதற்கு நான் காரணமாக இருந்தமையால் அந்தப் பாவத்தைப் போக்கும் பொருட்டுக் கங்கை நீர் ஆட வந்தேன்.''

''யார் யாருக்குச் சொன்னீர்கள்? என்ன நிகழ்ந்தது? சற்றே விரிவாகச் சொல்லவேண்டும். நான் தமிழ் நாட்டை விட்டு வந்து பல நாட்கள் ஆயினமையின் அந்தப் பக்கத்துச் செய்திகளைச் சொல்வார் இல்லை. நல்ல வேளை! இப்போது நீங்கள் வந்தீர்கள்.' எல்லாவற்றையும் அடைவாகச் சொல்லுங்கள்.''

''நான் சொல்லப்போவது நல்ல செய்திகள் அல்ல. இறந்ததும் துறந்ததுமான செய்திகளே அவை.''

''இருக்கட்டும். அதனால் என்ன? நடந்ததைத் தானே சொல்லப் போகிறீர்கள்? சொல்லுங்கள்.''

''கோவலன் கண்ணகியோடு மதுரைக்குச் சென்றபோது ஊருக்குப் புறம்பேயுள்ள ஆயர்பாடியில் அவளை இருத்திவிட்டுச் சென்றான். அங்கே இருந்த ஆயர்குல மகளாகிய மாதரி என்பவள் அவளுக்கு வேண்டிய பண்டங்களைக் கொடுத்துச் சமைத்து உண்ணும்படி சொன்னாள்; தாய் போன்ற அன்பைக் காட்டினாள். கோவலன் கொலையுண்டதையும்

கண்ணகிக்கு வந்த துன்பத்தையும் அறிந்த அவள் எரியில் விழுந்து இறந்தாள். கோவலன் கண்ணகி யுடன் மதுரைக்கு வழித் துணையாக வந்த கவுந்தி என்னும் பெண் துறவி உண்ணுமல் விரதமிருந்து உயிர் நீத்தாள். இவற்றையெல்லாம் அறிந்து, மதுரை மாநகர் தீக்கு இரையானதையும் தெரிந்து கொண்டு, என் ஊராகிய தலைச்செங்கானம் சென் றேன்.''

''நீங்கள் சொன்ன வார்த்தையால் யாரும் இறந்த தாகத் தெரியவில்லையே ?''

''இனிமேல்தான் அந்தக் கதை வருகிறது. என் ஊருக்கு அருகில்தான் சோழனது தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினம் இருக்கிறது. அங்கே உள்ள பெரியவர்களிடம் மதுரையில் கோவலனுக்கும் கண்ணகிக்கும் உற்ற துன்பங்களையும் மற்றவற்றையும் சொல்லி வருந்தினேன். அந்தச் செய்தியைக் கேட்டுக் கோவலனுடைய தந்தையாகிய மாசாத்துவான் தன் பொருளையெல்லாம் தானம் பண்ணிவிட்டுப் பௌத்த சமயத் துறவியாகிவிட்டான். அவனுடைய மனைவி தன் மகன் இறந்தது கேட்டுத் தன் உயிரை நீத்தாள். கண்ணகியின் தந்தையாகிய மாநாய்கனே ஆசீவக சமயத் துறவி ஆனன். அவன் மனைவியும் இறந்து பட்டாள். மாதவி இந்த அவலச் செய்தியைக் கேட்டுத் தான் பௌத்த சமயத் துறவியானதோடு, தன் மகள் மணிமேகலையையும் துறவு பூணச் செய்து விட்டாள். என்னுற் செய்தியை அறிந்து கோவலன் தாயும் கண்ணகியின் தாயும் இறந்தார்கள் அல்லவா ? அதற்குக் காரணமாகும் பாவம் என்னைத்தானே

சாரும்? அதனுல்தான் இங்கே கங்கையில் நீராட வந்தேன்'' என்று மாடலன் கூறி முடித்து அரசனை வாழ்த்தினுன்.

செங்குட்டுவன், ''பாண்டி நாட்டில் இப்போது யார் அரசாள்கிருர்?'' என்று கேட்டான்.

''கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன் அரியணை ஏறியிருக்கிருன்'' என்ருன் மாடலன்.

இப்படி அவ்வந்தணனேடு சேரமான் உரையாடிக் கொண்டிருந்தபோது கதிரவன் மறைந்தான். இரவு வந்தது. வெள்ளிய பிறை வானத்திலே தோன்றியது. அதனுடைய அழகைப் பார்த்துக்கொண்டு வெளியே வந்து நின்ருன் அரசன். அந்தச் சமயம் பார்த்து அரசனுடன் வந்திருந்த சோதிடன், ''அரசர் பெருமான் வஞ்சிமாநகரை விட்டுப் புறப்பட்டு முப்பத்திரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. வாழ்க நின் கொற்றம்!'' என்று கூறினுன். 'இனி விரைவில் திரும்பிச் செல்லவேண்டும்' என்று அரசனுக்குப் புலப்படுத்துவதற்காகவே அவன் இந்தச் செய்தியைச் சொன்னுன்.

அரசன் தன் கூடாரத்தை அடைந்து மாடலனை அழைத்துவரச் சொன்னுன். அம் மறையவன் வந்ததும், ''காவிரிப்பூம் பட்டினத்தில் சோழ மன்னன் நலமாக இருக்கிருனு?'' என்று கேட்டான். செங்குட்டுவனுக்கு உறவினன் அவன்.

''சோழன் செங்கோல் திறம்பாது ஆட்சி புரிந்து வருகிருன். அவனுக்குத் தீங்கு ஏதும் இல்லை'' என்று விடை கூறினுன் மாடலன்.

பிறகு செங்குட்டுவன் அம்மறையவனுக்குத் தன் நிறையைப்போல ஐம்பது மடங்கு நிறையுள்ள பொன்னைத் தானமாக அளித்தான். நூற்றுவர் கன்னரை அவர்கள் நாட்டுக்குப் போகும்படி விடைதந்து அனுப்பினன். வேறு சிலரை அழைத்து, "தமிழ் மன்னர்களின் ஆற்றலை அறிந்துகொள்ளாது போர் செய்த கனக விசயர்களைத் தமிழ் நாட்டிலுள்ள சோழனுக்கும் பாண்டியனுக்கும் காட்டி வாருங்கள்" என்று ஏவினன்.

பின்பே துயில் கொள்ளப் போனன், செங்குட்டுவன்.

விடிந்தது. "இனி நாம் நம் நகருக்கு மீளவேண்டும்" என்று அரசன் பணிக்க யாவரும் புறப்பட்டார்கள். அரசனைப் பிரிந்திருந்த மக்களும் அரசியும் மகிழ்ச்சிகொள்ள, வெற்றித் திருவோடும் பத்தினித் தெய்வச் சிலையோடும் அரசன் வஞ்சிமா நகரை அடைந்தான். நகர மாந்தர்கள் யானை வரிசைகளை முன்னிட்டுக்கொண்டு, வந்து வரவேற்றார்கள். அரசனை வாழ்த்தி அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

# 10. பெரு வேள்வி

மாலைக் காலம் வந்தது. மகளிர் விளக்குகளை ஏற்றினர். செங்குட்டுவன் படையெடுத்துச் சென்ற போது அவனுடன் போய் வெற்றியுடன் மீண்ட வீரர் கள் தங்கள் காதலிமாருடன் அளவளாவி இன்புற்ற னர். ஆடலைக் கண்டும் பாடலைக் கேட்டும் களித்தனர்.

அந்த மாலையில் மாசு மறுவற்ற வானத்தில் திங்கள் தண்ணிய நிலாவைப் பால்போல் பொழிந்து கொண்டிருந்தது. நிலா, மாளிகைகளின் மேலும் மண்டபங்களிலும் பரந்து அழகு செய்தது. வஞ்சிமாநகரின் நடுவில் மேருவைப்போல உயர்ந்து நின்றது அரசன் அரண்மனை. பொன்னும் மணியும் கொண்டு அலங்காரம் செய்த அரங்கம் ஒன்று அதில் உண்டு. நிலா மாடமும் இருந்தது. திங்களின் அழகைக் கண்டு மகிழ்வதற்காகச் சேரமானுடைய மாதேவி புறப்பட்டாள். அந்தப்புரத்திலுள்ளவர்கள் வரிசை வரிசையாக நின்று அவளை வாழ்த்தினர்.

அழகான மகளிர் தம் கைகளில் விளக்குகளை ஏந்திப் பல்லாண்டு பாடினர். முழவும் யாழும் இசைத் தன ஒருசார். ஒருபக்கம் இன்னிசைப் பாடல் பரந்தது. அந்தப்புரத்தில் ஏவல் செய்யும் கூனியரும் குட்டைப் பெண்களும் கத்தூரியும் சந்தனமும் கையில் எடுத்து நின்றார்கள். பூசும் வண்ணமும் சுண்ணமும் மலர் மாலைகளும் பேடிகள் ஏந்தினார்கள். ஒருபக்கம் பூவும் வாசனைப் புகையும் நறுமணப் பொருள்களும் கொண்டு நின்றனர் சிலர். கண்ணாடி ஒரு பக்கம், ஆடைகளும்

அணிகலன்களும் ஒரு பக்கம் சேடிமார் ஏந்தி நின்றனர்.

அப்போது சேரமான் அங்கே வந்து தன் பட்டத் தரசியுடன் அங்குள்ள அழகிய அரங்கத்தில் ஏறித் தனக்குரிய இருக்கையில் அமர்ந்தான். அந்தச் சமயத்தில் பறையூரிலிருந்து வந்த சாக்கையன் என்பவன் நடனமாடத் தொடங்கினன். மறையவனுகிய அவன் குலத்தினர் கூத்தாடுவதில் வல்லவர். கொடு கொட்டி என்ற கூத்தை அவன் ஆடிக் காட்டினன். அந்தக் கூத்து முன்பு சிவபெருமான் ஆடியது. அதனை மிகச் சிறந்த வகையில் கூத்தச் சாக்கையன் அபிநயம் பிடித்து ஆடினன். அரசியுடன் இருந்து அந்தக் கூத்தைக் கண்டு களித்த அரசன் அக்கூத்தனுக்குப் பரிசில் வழங்கி விடை கொடுத்தனுப்பினன்.

அப்பால், செங்குட்டுவன் அரசிருக்கை மண்டபத்தை அடைந்தான். கனகவிசயரைப் பாண்டியனுக்கும் சோழனுக்கும் காட்டிவிட்டு வரும்படி முன்பு அவன் அனுப்பியிருந்த பிரதானிகளும், மாடலனும் அப்போது அங்கே வந்து சேர்ந்தார்கள். அவர்கள் செங்குட்டுவனைத் தொழுது வாழ்த்தித் தாங்கள் சென்று வந்த செய்தியைச் சொல்லலானார்கள்.

"நாங்கள் முதலில் சோழ மன்னனுடைய புகார் நகரம் சென்றோம்; சித்திர மண்டபத்தில் இருந்த வேந்தனை ஆரிய மன்னரோடு சென்று வணங்கினோம். அவன் வடநாட்டில் மன்னர்பிரான் செய்த போரை அறிந்து, 'தோற்றவர்களைச் சிறைப்பிடித்துக் கொண்டு வருவது வெற்றியாகாது' என்று தன் படைத் தலைவனிடம் சொன்னன். அதுகேட்டு மனம் வருந்தி

விடைபெற்று அங்கிருந்து புறப்பட்டோம். மதுரை மாநகரம் சென்று பாண்டிய மன்னனைக் கண்டோம். அவன், 'தோற்று ஓடினவர்களின்மேல் சீற்றம் கொள்வது முறையன்று; இது புதுமையாக இருக்கிறது' என்றான். இரண்டு மன்னர்களும் இந்த வெற்றிச் செயலைப் பாராட்டாமல் இருந்தது கிடக்கட்டும்; இழித்துக் கூறிவிட்டார்களே!'' என்று சென்றவர்களில் தலைவனாகிய நீலன் கூறினான்.

செங்குட்டுவன் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. கனகனும் விசயனும் பொதுவாகத் தமிழ் மன்னர் மூவரையுமே இகழ்ந்து பேசினார்கள். அவர்களை அடக்குவது இகழ்ச்சியைப் பெற்ற மூவருக்கும் உரிய கடமை. சேரமன்னன் தமிழ் மன்னர்களின் பிரதிநிதியாகச் சென்று போர்செய்து, இழித்துப் பேசியவர்களை வென்று சிறைப்பிடித்தான். இமயத்தில் கல் கொணர்வதற்காக அவன் போகவேண்டியது அவசியம் அன்று. இழித்துப்பேசிய மன்னர்களுக்கு அறிவூட்டவேண்டும் என்பதுதான் அவனுடைய தலைமையான நோக்கம். இப்படி இருக்க, இந்த அருமையை உணராமல் சோழ மன்னனும் பாண்டியனும் செங்குட்டுவன் செயலைத் தாழ்த்திப் பேசிவிட்டார்கள்.

இந்தச் செய்தியைக் கேட்ட செங்குட்டுவனுக்கு உள்ளம் கொதித்தது; சினம் பொங்கிவந்தது; கண்கள் சிவந்தன.

அப்போது அங்கே அமர்ந்திருந்த மாடலமறையோன் எழுந்திருந்தான்; "மாமன்னருக்கு ஒரு சிறு விண்ணப்பம் செய்துகொள்ள விழைகிறேன்" என்று நயமாகப் பேசினான்.

"என்ன அது? நன்றிகெட்ட அந்த இரண்டு மன்னர்களுக்கும் எப்படிப் புத்திபுகட்டுவது என்பதைச் சொல்லப் போகிறீர்களா? கனகவிசயர் இழித்துப் பேசியதற்காக இத்தனை தூரம் கடந்து போர் செய்யப் போனேனே! நம்மைச் சேர்ந்த இவர்களே நம் அருமை அறியாமல் இருக்கும்போது மற்றவர்களைச் சொல்வது என்ன முறை?" கோபத்தால் அவனுக்குச் சிரிப்பு உண்டாயிற்று.

"சற்றே சினம் ஆறி, நான் சொல்வதைச் செவியில் ஏற்கவேண்டும்" என்று மறுபடியும் மாடலன் மெல்லச் சொன்னான்.

செங்குட்டுவன் சற்று மௌனமாக இருந்தான்; பின்பு மாடலனை நோக்கி, "சொல்லுங்கள்" என்றான்.

"மன்னர்பிரானுடைய புகழ் வாழ்க! கொற்றம் வாழ்க! தாங்கள் பல போர் செய்து பகைவர்களை அழித்து வெற்றிபெற்றீர்கள். போன இடங்களிலெல்லாம் வெற்றியே அன்றித் தோல்வியே காணாதவர்கள் தாங்கள். தங்கள் வாழ்நாள் ஆற்றுமணலினும் பல மடங்காகப் பெருகட்டும்! நான் சொல்லும் சில வார்த்தைகளைப் புறக்கணிக்காமல் செவியில் ஏற்க வேண்டும். நான் பல நாடுகளும் சென்று பல பெரியோர்களோடு பழகியவன். உலகமெல்லாம் நன்றாக வாழவேண்டுமென்ற நோக்கம் உடையவன். இப்போது சொல்லப்போவது எல்லோருடைய நன்மையையும் மனத்திற் கொண்டுதான். முக்கியமாகத் தங்களுக்கும் இதனால் நன்மையே உண்டாகும்."

"என்ன? சொல்லுங்கள். நான் உங்கள்மேற் கோபம் கொள்ளவில்லையே!"

"யார்மேலானாலும் சரி, கோபம் கொள்ளாமல் சற்றே அமைதிபெற்றுக் கேட்கவேண்டும். இந்த நாட்டைக் காக்கும் பெரிய பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொண்டு ஐம்பது ஆண்டுகள் ஆயின. இது வரைக்கும் பல போர்க்களங்களைக் கண்டுவிட்டீர்கள். பலரை முதுகுகாட்டி ஓடச் செய்தீர்கள். போர்க் களத்தில் பகைவர் படையைக் கொன்று குவித்தீர்கள். வீரத்தைக் காட்டினீர்கள். ஈரத்தைக் காட்டி நல்ல காரியங்களைச் செய்யத் தங்களுக்கு ஓய்வு இல்லாமற் போயிற்று. இனிமேலாவது செய்ய வேண்டாமா?" என்று கூறிச் சற்றே நிறுத்தினான் மாடலன்.

"அரசகுலத்தில் பிறந்தவர்கள் வீரச்செயல்களைப் புரிந்து பகைவர்களை வெல்வது வழக்கந்தானே?" என்று செங்குட்டுவன் கேட்டான்.

"அது உண்மைதான். ஆனால் அதையன்றி வேறு காரியங்களும் அவர்கள் செய்வதுண்டு. நாம் எப்போதும் இப்படியே இருப்போம் என்று எண்ணுவது அறிவுடையோர்களுக்கு அழகுஅன்று. இதற்கு முன் தங்கள் மரபில் பல பெரிய வீரச் செயல்களைப் புரிந்த மன்னர்கள் இருந்திருக்கிறார்கள். எவ்வளவு பெரிய திறலுடையவர்களாக இருந்தால் என்ன? எல்லாரும் மாய்ந்து ஒழிந்தனர்; ஒருவரேனும் இப்போது இல்லை. காரணம் என்ன? இந்த யாக்கை நிலையாதது. எப்போது பிறந்தோமோ, அப்போது இறப்பும் நிச்சயமாக நமக்கு உண்டு என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

"உடம்போடு வாழும்போது வளவாழ்க்கை வாழுகிறோம். செல்வத்தை ஈட்டி வாழ்கிறோம். அந்தச்

செல்வமாவது ஓரிடத்தில் நிலையாக நிற்கிறதா? வட வாரிய மன்னர்கள் நிறைந்த செல்வத்தோடுதான் வாழ்ந்தார்கள். இப்போது அவர்கள் சிறைப்பட்டுக் கிடக்கிறார்கள். அவர்கள் செல்வம் நிலைக்கவில்லை. ஆகையால் செல்வமும் நில்லாதென்பதை உணர்ந்து கொள்வீர்களாக. இளமையும் நில்லாது என்பதை நான் தனியே எடுத்துச் சொல்லவேண்டுமா? தங்களுக்கே இப்போது இளமைபோய் நரை வந்துவிட்டதே!''

செங்குட்டுவன் பெருமூச்சுவிட்டான்; ''நான் என்ன செய்யவேண்டும் என்பதைச் சொல்லுங்கள்'' என்றான்.

''அதைத்தான் சொல்லவருகிறேன். இந்த உலகத்துப் பிறந்த உயிர்கள் இறந்தால் எல்லோரும் ஒரே விதமான கதியை அடைவதில்லை. அவரவர்கள் செய்யும் புண்ணிய பாவங்களுக்கு ஏற்றபடி வெவ்வேறு பிறவிகளை எடுப்பார்கள். மனிதப் பிறவியைப் பெற்றவர்கள் இனிமேல் தாழ்ந்த பிறவிகளைப் பெறமாட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. தேவனாக இருந்தவன் மனிதனாகப் பிறக்கலாம். மனிதனாக இருந்தவன் விலங்காகப் பிறக்கலாம். நாடகத்தில் கோலம் புனையும் கூத்தர்கள் எப்படி மாறி மாறி வெவ்வேறு வேடத்தைப் போடுகிறார்களோ அப்படி இந்த உயிர் வெவ்வேறு பிறவியை எடுத்து வெவ்வேறு உடம்பை அடைகிறது. வினை செலுத்தும் வழியிலே உயிர் செல்லும். இவற்றையெல்லாம் தாங்கள் திருவுள்ளத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும்.''

செங்குட்டுவன் கண்ணில் இருந்தசிவப்பு மறைந்தது. மாடலன் வார்த்தைகள் மெல்ல அவன் உள்ளத்

தில் புகுந்து வேலை செய்யத் தொடங்கின. அவன் மாடலனுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

"எல்லோரும் உண்ணுகிறார்கள்; உறங்குகிறார்கள்; செத்துப்போகிறார்கள்; மறுபடியும் ஏதாவது ஒரு பிறவியை எடுக்கிறார்கள். அத்தகைய நிலை தங்களுக்கு வரக்கூடாதென்பது என் ஆவல். இனி, போர்க்களத்தில் வென்று வெற்றியைநிலை நாட்டும் கருத்தை மறந்துவிட்டு அறநெறிக்குரிய வேள்விகளைச் செய்யவேண்டும். இராசசூய யாகம் செய்தல் நல்லது. அதை இப்போதே செய்யவேண்டும். நாளைக்குச் செய்யலாம் என்றால், நாம் எவ்வளவு நாள் உயிரோடு இருப்போம் என்ற உறுதி நமக்கு இல்லை. ஆகையால் தங்கள் வாழ்க்கைத் துணைவியாகிய அரசியாரோடு இருந்து பெருவேள்வி செய்து நீடூழி வாழவேண்டும்" என்று சொல்லித் தன் நல்லுரையை முடித்தான் மாடலன்.

அவனுடைய நயமான மொழிகள் செங்குட்டுவனுடைய உள்ளத்தில் மெல்ல மெல்லப் புகுந்தன. சேர அரசனும் அறிவுடையவனாதலால் அந்தணன் கூறியவை தனக்கு நலம் செய்வன என்பதை நன்கு உணர்ந்தான்.

பின்பு ஒரு நல்ல நாளில் வேள்விச் சாந்தி செய்வதற்கு ஏற்ற மறையவர்களையும் மற்றத் துணைவர்களையும் அழைத்துவரச் செய்தான். மாடலன் சொல்லிய முறையில் பெருவேள்வியை நடத்துவதற்கு ஆவன செய்யும்படி ஏவினான். சிறையில் வைத்திருந்த இரண்டு வடநாட்டரசர்களையும் பிறரையும் விடுதலை செய்து வஞ்சிமாநகர்ப்புறத்தில் தங்கியிருக்கச் செய்தான்.

பெருவேள்வி மிகச் சிறப்பாக நடைபெற்றது. அடுத்தநாளே வட நாட்டு மன்னர்களை அவர்களுடைய ஊர்களுக்குப் போகும்படி அனுப்பினன். தன் அமைச்சனைக் கொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வித்தான். ''சிறைக் கோட்டங்களைத் திறந்து குற்றவாளிகளை விடுதலை செய்யுங்கள். வரிகளை வாங்காமல் விட்டுவிடுங்கள்'' என்று ஏவினன்.

அப்பால் கண்ணகிக்குக் கோயில் கட்டுவிக்கத் தொடங்கினன். அதற்குரிய விதிகளை அறிந்த பெரியவர்களையும் கலைஞர்களையும் வருவித்தான். கோயிலை அழகாகச் சமைத்தான்.

கோயில் மிகச் சிறப்பான முறையில் கட்டி நிறைவேறியது. இனி அங்கே கண்ணகியின் படிமத்தை நிறுவிக் கடவுள் மங்கலம் செய்யவேண்டும். அதற்குரிய காரியங்களைக் குறைவறச் செய்யும்படி ஏவினன் மன்னன்.

# 11. பத்தினி கோயில்

கோவலனுக்கும் கண்ணகிக்கும் நேர்ந்த துயரத்தை அறிந்து அவ்விருவரின் தந்தையரும் துறவு பூண்டதையும், தாய்மார் இருவரும் உயிர் நீத்ததையும் மாடலன் செங்குட்டுவனிடம் முன்பு சொன்னான் அல்லவா? கண்ணகியோடு இருந்து அவளுடன் நெருங்கிப் பழகிய தோழி ஒருத்தி உண்டு. மறைக் குல மகளாகிய அவளுக்குத் தேவந்தியென்பது பெயர். கண்ணகியை வளர்த்த செவிலித்தாய் ஒருத்தி இருந்தாள். செவிலித் தாயைக் காவற்பெண்டு என்றும் சொல்வார்கள். அந்தச் செவிலியின் மகள் ஒருத்தியும் கண்ணகிக்குத் தோழியாக இருந்தாள். இம் மூவரும் கோவலன் கொலையுண்டதையும் கண்ணகி மதுரையை எரித்துவிட்டுப் புறப்பட்டதையும் கேள்வியுற்றார்கள். கண்ணகியை விட்டுவிட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தில் இருப்பதற்கு அவர்களுக்கு மனம் இல்லை. ஆதலின் அவர்கள் மூன்று பேரும் புகார் நகரத்தை விட்டு மதுரைக்கு வந்தார்கள்.

கண்ணகி எங்கே தங்கியிருந்தாள், அவள் கணவன் எங்கிருந்து போனான், எப்படிக் கொலையுண்ணப் பட்டான் என்று அவர்கள் விசாரித்து அறிந்தார்கள். மதுரைக்குப் புறம்பேயுள்ள ஆயர்பாடியில் கண்ணகி தங்கியிருந்த செய்தி தெரிந்தது. அங்கே அவளைப் பாதுகாத்து வேண்டிய உதவிகளைச் செய்த மாதரி என்னும் ஆய்மகள் துயரம் தாங்காது இறந்த செய்தியைக் கேள்வியுற்றார்கள். அவளுடைய பெண்ணாகிய ஐயை என்பவள் அங்கே இருந்தாள்.

கண்ணகிக்கு வேண்டிய ஏவலைச் செய்தவள் அவள்; கண்ணகியினிடம் பேரன்பு படைத்தவள். அவள் தனக்கு மணம் புரிவார் யாரும் இல்லாமல் கன்னி யாகவே இருந்தாள். இம் மூவரையும் கண்ட அவள், ''நானும் உங்களுடன் சேர்ந்து வருகிறேன்'' என்றாள்.

நான்கு பேர்களும் கண்ணகி எந்த வழியாக வஞ்சிமாநகருக்குப் போனாளோ அந்த வழியை மேற்கொண்டு நடந்தார்கள். வையையாற்றின் கரை வழியே சென்று மலைநாட்டை அடைந்தார்கள். பிறகு வஞ்சிமா நகர் சென்றபோது, 'இன்றுதான் கண்ணகி கோயிலில் கடவுள் மங்கலமாகிய பிரதிட்டை நடக் கிறது' என்று கேள்வியுற்றார்கள். 'தக்க காலத்தில் வந்தோம். இதுவே கண்ணகி நம்பால் வைத்திருந்த அன்புக்கு அறிகுறி' என்று பெருமகிழ்ச்சியை அடைந்து, யாவரும் பத்தினி கோயிலுக்குச் சென் றனர்.

அங்கே செங்குட்டுவன் இருந்தான். பல பெரி யோர்கள் குழுமியிருந்தனர். வஞ்சிமாநகரத்து ஆட வரும் மகளிரும் பக்தியுடன் நின்றிருந்தார்கள். கடவுள் மங்கலத்துக்குரிய நிகழ்ச்சிகள் நடந்து கொண் டிருந்தன.

இந்த நான்கு பெண்மணிகளும் கோயிலுக்குள் புகுந்து செங்குட்டுவனைக் கண்டார்கள். அவன் அவர்களை, ''நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர் கள்?'' என்று கேட்டான்.

''வடபேரிமயத்திலே பிறந்து கங்கைப் புனலாடிப் போந்த இந்தப் பத்தினித் தெய்வத்துக்குத் தோழி நான்; காவிரிப்பூம் பட்டினத்தில் கண்ணகியாக இருந்த

போது அவளுடன் இருந்து அளவளாவும் பேறு பெற்றவள்'' என்ருள் தேவந்தி.

"தன் கணவன் தன்னைப் பிரிவதற்குக் காரணமாக இருந்த மாதவியினிடம் சிறிதும் சினம் கொள்ளாமல், தன் கணவனுடன் காட்டுவழியே சென்ற கண்ணகிக் குச் செவிலித்தாய் நான்'' என்ருள் மற்ருெருத்தி.

"தன்னைப் பெற்ற அன்னைக்கும் அவள் ஒரு வார்த்தை சொல்லவில்லை. வளர்த்த செவிலியாகிய என் அன்னைக்கும் ஒரு சொல் இல்லை. யாரும் அறியா மல் கற்பு ஒன்றையே கருதித் தன் கணவன் பின்னே போன அந்தப் பெருமாட்டிக்குத் தோழி நான்''என்ருள் ஒருத்தி.

ஐயை இன்ருள் என்பதையும் தேவந்தி சொன் ருள். யாவரும் கண்ணகியின் உருவச் சிலையைக் கண்டு ஆராமை மீதூரப் பார்த்தார்கள்.

அப்போது செங்குட்டுவன் வானத்தில் ஒரு காட்சியைக் கண்டு வியந்தான்; "என்னே இது! என்னே இது! பொற்சிலம்பும் மேகலையும் வளைக் கையும் வயிரத் தோடும் பொன்ருபரணங்களும் அணிந்து, மின்னற்கொடி போன்ற ஓர் உருவம் அதோ வானத்தில் தோன்றுகிறது!'' என்று அவன் கூவினன். எல்லாரும் அத்திசையை நோக்கினர்கள்.

அப்போது வானிலே ஓர் ஒலி எழுந்தது. "நெடுஞ் செழியனுகிய பாண்டியன் சிறிதும் குற்றம் இல்லாத வன். அவன் தேவ அரசனுடைய அரண்மனையில் நல் விருந்தாக இருக்கிருன். நான் முருகன் எழுந்தருளி யிருக்கும் குன்றில் என்றும் விளையாடுவேன். தோழிமார் எல்லாரும் வாருங்கள்'' என்று அந்த ஒலி கூறியது.

அங்கே இருந்த மகளிர் யாவரும் கண்ணகியைப் புகழ்ந்து பாடத் தொடங்கினார்கள். தரிசனம் செய்ய வந்தவர்கள் எல்லாம் வியப்பிலே மூழ்கினார்கள். "கண்ணகி தெய்வம் என்பது முக்காலும் உண்மை. பாண்டியன் செய்த தீங்கினால் அவள் கணவனை இழந்தாள் என்று உலகம் சொல்கிறது. தன் பேரருளால் அதை மறந்தல்லவா இந்தத் தெய்வமங்கை பேசுகிறாள்? நாமெல்லாம் இந்தத் தெய்வத்தை நம்முடைய சேரமான் உருவாக்கினமையால் எங்கள் அரசனுடைய மகள் என்று சொல்கிறோம். ஆனால் இவளோ தான் பாண்டியன் மகள் என்றல்லவா சொல்கிறாள்? நாம் சேரமானை வாழ்த்திக்கொண்டிருக்க, இந்தப் பிராட்டியோ பாண்டியனை வாழ்த்துகிறாள்! என்ன அருள்!" என்று சொல்லிச் சொல்லி அதிசயித்தார்கள்.

பெண்கள் சோழனையும் பாண்டியனையும் சேரனையும் பாடி வாழ்த்தினார்கள். கண்ணகியின் பெருமையைப் பாடிப் பாடி மகிழ்ந்தார்கள்.

கடவுள் மங்கலம் நிறைவேறியது. கண்ணகி தெய்வத்தன்மையுடன் அந்தக் கோயிலில் எழுந்தருளி நலம் செய்வாள் என்று யாவரும் நம்பி வணங்கினர். அரசன், திருக்கோயிலில் நாள்தோறும் நடக்கவேண்டிய பூசைக்கும் அவ்வப்போது சிறப்பாக நடக்கவேண்டிய விழாக்களுக்கும் உரிய நிபந்தங்களை அமைத்தான். "இந்தப் பெருமாட்டிக்குரிய பூசனையை நீயே செய்வாயாக!" என்று தேவந்தியைப் பணித்தான்.

கோயிலை வலமாக மும்முறை வந்து சேர அரசன் பத்தினித் தெய்வத்தை வணங்கினான்; பிறகு அங்கே வந்திருந்த வேறு மன்னர்களும் பணிந்து வணங்கி

ஞர்கள். வடநாட்டு அரசர்களும், கொங்குநாட்டு மன்னரும், மாளுவ வேந்தரும், இலங்கையிலிருந்து வந்திருந்த கயவாகு வேந்தனும், "பத்தினிக் கடவுளே! எங்கள் நாட்டிலும் உன்னை நிறுவி வணங்க எண்ணியிருக்கிறோம். இங்கே நீ இருந்து அருள் செய்தது போல அங்கும் எழுந்தருளி வரம் தர வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள். "அவ்வாறே தந்தேன் வரம்" என்று ஒரு குரல் வானில் எழுந்தது. யாவரும் மனம் உருகி அத்தெய்வத்தை வாழ்த்தினார்கள். செங்குட்டுவன் அங்கிருந்து அகன்றான்.

அதன் பின்பு இளங்கோவடிகள் கோயிலுக்கு வந்தார். கண்ணகியை வாழ்த்தி வணங்கினார். அப்போது தேவந்தியின்மேல் கண்ணகி ஆவேசமாக வந்து, இளமையில் இளங்கோவடிகள் துறவுபூண்ட வரலாற்றை எடுத்துரைத்தாள்; "செங்குட்டுவனுக்கு உண்டான கவலையை நீக்கி, இந்தப் பூபாரம் எனக்கு வேண்டாம் என்று துறந்து, சிந்தை செல்லாத பேரின்ப அரசை ஆள்கின்ற வேந்தன் நீ அல்லவோ?" என்று பாராட்டினாள். இளங்கோவடிகள் பத்தினித் தெய்வத்தைப் பரவிப் பாடினார்.

# 12. சிலம்பின் உதயம்

புலவர் சாத்தனூரால் கண்ணகியின் வரலாற்றை உணர்ந்து, சிலப்பதிகாரம் என்ற பெயரால் அந்த வரலாற்றைக் காவியமாகப் பாடத் தொடங்கினூர் இளங்கோவடிகள் என்பதை முன்பு பார்த்தோம். அது முதல் அவர் அந்த வரலாற்றுக்குரிய செய்திகளை யெல்லாம் மெல்ல மெல்ல விசாரித்து அறிந்து கொண்டார். சோழநாட்டிலிருந்தும் பாண்டி நாட்டி லிருந்தும் வந்த மக்களை உசாவிப் பலவற்றைத் தெரிந்துகொண்டார். எப்படி எப்படிக் காவியத்தை அமைக்க வேண்டும் என்று சிந்தனையில் ஆழ்ந்தார்.

ஒருவாறு திட்டம் செய்துகொண்டு காவியத்தை இயற்றத் தொடங்கினூர். தம்மிடம் தமிழ் பயிலும் மாணுக்கர்களுக்குச் சொல்லி, எழுதும்படி செய்தார். எல்லாச் சமயத்தினருக்கும் பொதுவான காவியமாக அமைக்கவேண்டும் என்பது அவர் விருப்பம்.

சிலப்பதிகாரக் கதையை மூன்று காண்டங்களாகப் பகுத்துக்கொண்டார். பூம்புகாராகிய காவிரிப்பூம் பட்டினத்தில் கோவலன் கண்ணகியை மணம் செய்து கொண்டு வாழ்ந்ததும், பின்பு மாதவியினிடம் மனம் செல்ல அவளுடன் சென்று இருந்ததும், பின்பு மனம் வேறுபட்டு அவளிடமிருந்து வந்து கண்ணகியோடு புறப்பட்டு உறையூரை அடைந்ததும் ஆகிய வரலாறுகள் உள்ள கதைப் பகுதிக்குப் புகார்க் காண்டம் என்று பெயர் கொடுத்தார். கோவலன் காட்டின் வழியே சென்று மதுரையை அடைந்ததும், கண்ணகியை ஆயர் சேரியிலே விட்டுவிட்டுச் சிலம்பு

விற்கச் சென்றதும், கொலையுண்டதும், பிறகு கண்ணகி பாண்டியன்முன் சென்று வழக்கிட்டதும், மதுரைமா நகரத்தை எரித்துவிட்டுப் புறப்பட்டு வந்து மலை நாட்டை அடைந்ததும், வானவிமானத்தில் கோவலனோடு ஏறிச் சென்றதும் ஆகியவற்றைச் சொல்லும் பகுதிக்கு மதுரைக் காண்டம் என்று பெயர் இட்டார். மூன்றாவது வஞ்சிக் காண்டம். அதில் கண்ணகி வான விமானத்தில் சென்றதைக் குறவர்கள் செங்குட்டுவனிடத்தில் வந்து சொன்னது, அவன் கோயில் எடுக்க முடிவு செய்து இமயம் நோக்கிச் சென்றது, வடநாட்டு அரசரோடு பொருது வென்றது, இமயத்திலிருந்து கல் கொணர்ந்து கங்கையில் நீர்ப்படை செய்தது, அங்கிருந்து வஞ்சிமா நகர் வந்து பத்தினித் தெய்வத்துக்குக் கடவுள் மங்கலம் செய்து வழிபட்டது முதலிய செய்திகள் அடங்கியிருக்கின்றன.

முதலில் திங்களுக்கும், கதிரவனுக்கும், புகார் நகருக்கும் வாழ்த்துக் கூறிக் காவியத்தைத் தொடங்கினார். இடையிலே, காடு முதலிய இடங்களில் உள்ள மக்கள் தங்கள் தங்கள் கடவுளரை வழிபடுவதாகச் சொல்லி, அந்தக் கடவுளரின் துதிகளை அமைத்தார். இந்த வகையில் வேட்டுவ வரி என்னும் பகுதியில் துர்க்கையின் துதியும், ஆய்ச்சியர் குரவை என்பதில் திருமாலின் தோத்திரமும், குன்றக் குரவையில் முருகனுடைய வாழ்த்தும் வருகின்றன. இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழின் கூறுபாடுகளும் இடையிடையே விரவி வரும்படி அமைத்தார்.

அதனைப் பாடப் பாட இளங்கோவடிகளுக்கு ஊக்கம் பெருகிவந்தது. பாடி முடித்தபோது அவருக்கு

என்றும் இல்லாத மனநிறைவு உண்டாயிற்று. இடையே சில முறை சாத்தனார் வந்து சென்றார். "காவியம் முடிந்த பிறகு வந்து வழக்கம் போல் சில நாள் தங்குகிறேன்" என்று சொல்லி அவர் போய் விட்டார்.

சிலப்பதிகாரத்தை இயற்றும் வாய்ப்புத் தமக்குக் கிடைக்கவில்லையே என்று சாத்தனார் முதலில் எண்ணி னார். பிறகு மாதவியின் மகளாகிய மணிமேகலையின் வரலாற்றை இயற்றத் தொடங்கினார். அதனால் அடிக்கடி வஞ்சிமாநகர் வருவதற்கு அவரால் இயல வில்லை. அவர் மணிமேகலை என்னும் காவியத்தை எழுதி முடித்துவிட்டார். 'எப்படியாவது ஒரு காவியம் செய்துவிட வேண்டும்' என்ற வீறு அவ ருக்கு இருந்தது. அதனால் அதை முழுமூச்சாக இருந்து முடித்தார்.

இளங்கோவடிகள் சிந்தனை செய்து செய்து மெருகேற்றிக் காவியத்தை நிறைவேற்றினார். சாத்தனார் மதுரையிலிருந்து வந்தார். அவர் தாம் இயற்றி முடித்திருந்த மணிமேகலை என்னும் காவியத்தைக் கொண்டுவந்திருந்தார். அவர் இளங்கோவடிகளிடம் வந்தார். அடிகள், "இரண்டு நாட்களுக்கு முன்தான் சிலப்பதிகாரத்தை இயற்றி முடித்தேன். உங்களுக் குச் சொல்லியனுப்பவேண்டும் என்று நினைத்தேன். நீங்களே வந்து விட்டீர்கள்!" என்று மகிழ்ச்சியுடன் கூறி, அவரை வரவேற்றார்.

அப்போதுதான் சாத்தனார், "நானும் ஒரு காவியம் செய்திருக்கிறேன். மணிமேகலையின் கதை யைச் சொல்வது அது" என்று சொன்னார்.

இளங்கோ, "நாம் முன்பு ஒருகால் பேசிக் கொண்டது இறைவன் அருளால் நிறைவேறி விட்டது. இருவரும் பெருநூல்களைச் செய்யவேண்டு மென்று உரையாடியது நினைவு இருக்கிறதா?" என்றார்.

"ஆம்! நன்றாக நினைவில் இருக்கிறது. நான் இந்தக் காவியத்தை முடித்துப் பல நாட்களாயின. வேறு வேலைகள் இருந்தமையால் முன்பே வர முடியாமற் போயிற்று" என்று சாத்தனார் சொன்னார்.

இரண்டு புலவர்களும் ஒருவருக்கொருவர் தம் காவியங்களைப் படித்துக் காட்டிக் கொண்டார்கள். அடுத்தடுத்து இந்தக் காவியங்களை அரங்கேற்றுவது என்று தீர்மானித்தார்கள்.

சாத்தனார் செங்குட்டுவனிடம் சென்று தங்கள் கருத்தை எடுத்துச் சொன்னார். அவன் எல்லையற்ற மகிழ்ச்சியை அடைந்தான்.

அரங்கேற்றம் நடைபெற்றது. முதலில் இளங்கோ வடிகள் சிலப்பதிகாரத்தை அரங்கேற்றினார். அந்த அவையில் தலைவராகச் சாத்தனார் இருந்தார். அடுத்து, சாத்தனார் மணிமேகலையை அரங்கேற்றும்போது இளங்கோவடிகள் தலைவராக இருந்தார்.

இரண்டு நூல்களையும் யாவரும் கேட்டு இன்புற்றார்கள். சிலப்பதிகாரத்தின் அமைப்பும் சுவையும் சமரச எண்ணமும் மிகச் சிறந்தனவாக இருந்தன. ஆதலால் அதை அதிகமாகப் புலவர் பாராட்டத் தொடங்கினர். அழகான வருணனைகளும், பாடுவதற்குரிய இசைப் பாட்டுக்களும், பண்பு நிறைந்த உரையாடல்களும் நிரம்பிய அது, விரைவில் தமிழ்நாடு முழுவதும் பரவிப் பெருமையைப் பெற்றது. அம்பிகையின் அடியார்கள் வேட்டுவ வரியில் உள்ள பாடல்களைப் பாடி

மகிழ்ந்தார்கள். திருமால் அன்பர்கள் ஆய்ச்சியர் குரவையில் உள்ள துதிப்பாடல்களைப் பாடி உருகினார்கள். முருக பக்தர்கள் குன்றக் குரவையில் வரும் வாழ்த்துக்களை இசையுடன் பாடி இன்புற்றார்கள். மகளிர் வரிப்பாடல்களைப் பாடி விளையாடினார்கள்.

இவ்வாறு சுவைப்பிழம்பாக இருக்கும் சிலப்பதிகாரம் தமிழர்களுடைய நெஞ்சை அள்ளுவதாக அமைந்து விட்டது. "தமிழ்த் தாயின் திருவடிகளுக்கு இளங்கோவடிகள் அணிந்த சிலம்பு இது" என்று சிலர் பாராட்டினர். "இயல், இசை, நாடகம் என்ற மூன்றும் அமைந்த முத்தமிழ்க் காப்பியம் இது" என்று சிலர் புகழ்ந்தார்கள். "மூன்று மன்னர்களையும் மூன்று நாடுகளையும் பாடும் தமிழ் நாட்டு வரலாற்றுப் பனுவல்" என்று சிலர் கூறினர். "சேரமன்னனாகிய செங்குட்டுவன் பத்தினித் தெய்வத்துக்கு அழகிய கற்கோயிலைக் கட்டினான்; அவனுடைய தம்பியாகிய இளங்கோவடிகளோ மிகமிக அழகான சொற்கோயிலைக் கட்டினார்" என்றார் ஒரு புலவர். "செங்குட்டுவன் கட்டிய கற்கோயிலைப் பார்க்க வேண்டுமானால் இந்த நகரத்துக்கு வந்துதான் காணவேண்டும்; அதற்கு இடஎல்லை உண்டு. ஆனால் இளங்கோவடிகள் அமைத்த சொற்கோயிலோ எவ்விடங்களுக்கும் சென்று இன்பந் தருவது. அதனால் இது சிறந்தது" என்றார் மற்றொரு புலவர்.

சிலப்பதிகாரம் இன்றளவும் நிலைபெற்றுச் செந்தமிழ் நாட்டில் சிறந்த காவியமாய் நிலவுகிறது. ஐம்பெருங்காப்பியங்கள் என்று சொல்லும் வரிசையில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்று ஐந்து காவியங்கள்

உண்டு. இந்த ஐந்திலும் முந்தியதும் சிறந்ததுமாக விளங்குவது சிலப்பதிகாரம். அதைப் புலவர்கள் சிலம்பு என்றும் வழங்குவார்கள்.

"சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்" என்று பாரதியார் பாடியிருக்கிறார். அந்தச் சிலம்பு பிறந்து தமிழ்த் தாயின் அணிகலனாக நிலவுவதற்குக் காரண மான நிகழ்ச்சிகளை இதுவரையில் உள்ள வரலாறு தெரிவிக்கிறது. சிலம்பு பிறந்த கதை இதுதான்.

---

## பயிற்சி

1. இளங்கோவடிகள் பயணத்தில் கண்டவை களைச் சுருக்கி வரைக.

2. இளங்கோவடிகள் துறந்ததற்குக் காரணமான நிகழ்ச்சி யாது?

3. கோவலன் கொலையுண்டதற்குக் காரணம் பழைய வினை யென்பதை விளக்கும் வரலாற்றை எழுதுக.

4. செங்குட்டுவன் வடக்கே படையெடுத்துச் செல்லக் காரணம் என்ன?

5. கடவுள் மங்கலம் செய்த நாளில் நிகழ்ந்த வற்றைச் சுருக்கி எழுதுக.

6. இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் எழுது வதற்கு என்ன காரணம்?

7. சிலப்பதிகாரத்தை எப்படி எப்படி மக்கள் பாராட்டினார்கள்?